பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 18 சனிக்கிழமை (04.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 311

# தமிழகத்தின் சலசலப்புக்கு இலங்கை அரசு அஞ்சமாட்டாது!

## இந்திய மத்திய அரசின் ஆதரவு இருக்கும்வரை எதற்கும் கவலையில்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக்ரோபர் 4

இலங்கை அரசுக்கு எதிராகவும், அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தமிழ் நாட்டில் அரசியல்கட்சிகளால் நடத்தப்படும் எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றி இலங்கைக்குக் கவலை யில்லை. தமிழ் நாட்டின் இத்தகைய சலசலப்புக்கு இலங்கை அரசு ஒருபோதும் அஞ்சாது.

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான உறவு நன்றாகவே உள்ளது. மத்திய அரசின் ஆதரவு இருக்கும்வரை எதற்கும் நாங்கள் கவலைப்படமாட்டோம் - என்றும் அவர் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்றிரவு இளைஞன் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக்.4

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் ரயில்வே தண்டவாளத்துக்கு அருகில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கல்வி வலய அலுவலகத்தில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஒக்.4

வடமராட்சி கல்வி வலய அலுவலகம் நேற்று முற்பகல் படையினரால் சுற்றிவளைக் கப்பட்டு சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)



சேதமடைந்த காவல்துறை தலைமையகம்

## புலிகளின் காவல்துறை தலைமையகம் மீது கிளிநொச்சியில் விமானங்கள் குண்டுவீச்சு

கிளிநொச்சி, ஒக்.4

கிளிநொச்சி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறையினரின் தலைமையகம் மீது நேற் றுக்காலை 9.30 மணியளவில் விமானப்படையினரின் கிபிர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலின்போது காவல்துறை நடுவப்பணியக வளாகத்தின் பின்புறத்தில் இருந்த மண்டபம் முற்றாக நாசமானது.

விடுதலைப் புலிகளின் ராதா வான்காப்புப் படையினர் விமானங்களை நோக்கி தாக்குதல் நடத்தினர் என்றும், அதனையடுத்து கிபிர் விமானங்கள் வன்னி வான்பரப்பை விட்டு மறைந்துவிட்டன என்றும் புலிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலால் காவல்துறையினரின் பிரதான தளத்துக்கு எவ்வித சேதமும் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி கனகபுரத்திலும் விமானக் குண்டுத் தாக்குதல்

### பொட்டு அம்மானின் மறைவிடம் மீது தாக்கியதாகக் கூறுகிறது அரசு

கொழும்பு, ஒக்.4

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் நேற் றுப் பிற்பகல் விமானப்படையின் ஜெற் விமா னங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல் களில் யுனிசெவ் அலுவலகம், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் மற் றும் மக்கள் குடியிருப்புக்கள் என்பன சேத மடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கிளிநொச்சி ஜெயந்தி நகரில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் ஒப்ரெக் கல்வி நிறுவனம் மற்றும் வெற்றிமனை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித்தாக்குதல்களைக் கண்டித்து லண்டனில் போராட்டத்துக்கு ஏற்பாடு

லண்டன், ஒக்.4

வன்னியில் பொதுமக்கள் மீதான விமா னத் தாக்குதல்களை கண்டித்து லண்ட னில் மாபெரும் போராட்டம் நடத்தப்பட வுள்ளது. பிரித்தானிய தமிழர் பேரவை யின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் திங்கட் கிழமை லண்டன் நகரில் உள்ள பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு பிரித் தானிய தமிழர்பேரவை விடுத்துள்ள அறிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான உணவு விநியோகத்தை குழப்பினால் ஐ.நா. சகித்துக்கொள்ளாது

### உலக உணவுத்திட்ட இயக்குநர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 4

இலங்கையின் வட பகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்வதை குழப்பும் நடவடிக்கைகளை சகித்துக்கொள்ளப் போவதில் லையென ஐக்கிய நாடுகளின் உலக உணவுத்திட்டம் கடுமையான தொனியில் எச்சரித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் ஆசியப்பிராந்தியத்திற் கான இயக்குநர் டொனி பன்பரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதல் நடைபெறும் வடபகுதியில் மிக மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 75 உணவு லொறிகள் இன்று அல்லது நாளை வன்னிக்கு!

கொழும்பு, ஒக். 4

வன்னிக்கு நேற்றுமுன்தினம் 51 உணவு லொறிகள் அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று அல்லது நாளை மேலும் 75 லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் உணவு லொறிகளை வன்னிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது என்றும் அதனடிப்படையில் டிசெம்பர் மாத இறு திக்குள் மொத்தமாக 5 ஆயிரம் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களநிலைவரம் குறித்து நேரில் கேட்டறிந்தார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக். 4

வன்னிக் களநிலைவரம் தொடர்பாக நேற்று ஆராய்ந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைள் குறித்து கள முனைத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

வன்னித் தலைமையகத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதிக்கு களநிலைவரம் தொடர்பாக வன்னி கட்டளைத் தளபதி (12ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கருணா குழுவினர் மீது ஆயுததாரிகள் சூடு!

### ஏறாவூரில் ஒருவர் பலி; மற்றவர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 4

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியின் ஏறாவூர் பகுதியில் உள்ள தன்னா முனை தேவாலயத்திற்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் (12ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர்கள் இன்று ஒரு மணிநேரம் அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.4

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளையின் வைத்தியர்கள் இன்று காலை 8 மணி முதல் ஒருமணி நேரம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட வுள்ளனர்.

அம்பாந்தோட்டை வைத்திய அதிகாரி டபிள்யு.டி.லக்ஷ்மி இடுநில் (வயது 38) கடந்த 29 ஆம் திகதி சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவத்தை கண்டித்து அரச வைத் திய அதிகாரிகள் சங்கம் மேற்கொள்ளும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே இன்று யாழ். வைத்தியர்க ளும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாக சங்க யாழ். கிளை செய லாளர் டாக்டர் யோ.சிவாகரன் தெரிவித்தார்.

அடையாள வேலை நிறுத்தத்துடன் காலை 8.30 மணிக்கு இரங்கல் கூட்டமும் யாழ். போதனா வைத்தியசாலையில் நடை பெறவுள்ளது.

கொல்லப்பட்ட வைத்திய அதிகாரி யின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாக சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி அறிவழகன் - வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி

**அ.அஜீவா**

(யா/இணுவில் மத்தியகல்லூரி)

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 1 ஆம் இடத்தை அடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை நெறிப்படுத்திய அக்கல்லூரி அதிபரையும், ஆசிரியர் களையும் வாழ்த்தி நன்றிகளைக் கூறி சண் கல்வி நிறுவனத் தினருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மப்பா— விமலராசா,
அம்மம்மா — இந்திராகாந்தி
மாமா — செந்தில்குமரன்

கொக்கன் வளவு,
இணுவில் கிழக்கு.

## அவசர கலந்துரையாடல்

**யாழ்.மாவட்ட ஆலய நிர்வாகிகளுக்கும் ஆலய குருமார்களுக்குமான அவசர கலந்துரையாடல்**

காலம்: நாளை (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 12.30 மணி தொடக்கம் 2 மணிவரை

விடயம்: தற்போது ஆலயங்களில் நடைபெறும் சூழ்நிலைகளைக் கருதி நடைபெறும் கலந்துரையாடலில் அனைத்து ஆலய நிர்வாகிகள் தங்கள் ஆலயப் பதிவுடனும் இந்து சமய நிறுவனங்களும், இந்துசமய அபிமானிகளும் தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

இடம்: தலைமைச் செயலகம் (குருகுலம்)
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

சர்வதேச இந்துமத குருமார்
ஒன்றியம் - இலங்கை.

தலைவர்

## கண்ணீர் அஞ்சலி

**கந்தசாமிப்பிள்ளை விக்கினராஜேஸ்வரன்**

(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், நிக்கரவெட்டிய கல்வி வலயம்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாளை வேண்டுகின்றேன்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

ஞா.சிவக்குமரன்
(பெறாமகன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் விஞ் ஞான ஆசிரியரும் பகுதித்தலைவருமாகிய

**திரு.பூ.தியாகலிங்கம்**

அவர்கள் அண்மையில் நடாத் தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் பௌ திகத்துறையில் பிளமிங்கின் இடக்கை விதியை இலகுமுறையில் செய்து காட் சிப்படுத்தியமைக்காக வெண்கலப் பதக்கத்தை இலங்கை புத்தாக்க கழகத்தின் ஆணையாளரிடம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ்/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜெயக்குமார் - ஜெயந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**ஜிதுஷன்**

(யா/மகாஜனக் கல்லூரி மாணவன்)

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் 132 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் பரீட்சையில் சித்தியடைய உறுதுணையாகவிருந்த ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுவதுடன் இவர் கல்வியில் மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல கும்பழாவளைப் பிள்ளையாரை அருள் வேண்டி நிற்பதுடன் இவரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: அப்பா, அம்மா, சகோதரர்கள், அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா (சுவிஸ்), மாமாமார் (லண்டன்), மாமிமார், மச்சான்மார், சித்தப்பா, சித்திமார், ஒன்றுவிட்ட சகோதரர்கள்.

அளவெட்டி மத்தி, அளவெட்டி.

## மழலைகள் பூங்கா விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 04

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க ஆதரவுடன் கலைவாணி சனசமூக நிலைய வத்தனை மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளி நடத்தும் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30மணிக்கு வத் தனை ஞானவைரவர் ஆலயத்துக்கு அரு கில் உள்ள மைதானத்தில் இடம் பெறும்.

முன்பள்ளியின் பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தலை மையில் நடத்தும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செய லர் இ.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (01)

## சிவபூமி மனவிருத்திப் பாடசாலை நவராத்திரிக் கலைவிழா

யாழ்ப்பாணம், ஒக். 04

கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவி ருத்திப் பாடசாலை நடத்தும் நவராத்திரி கலை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 ணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த விழா வில் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் சர வணபவன் ரவீந்திரா பிரதமவிருந்தின ராகவும் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.கே.அருள்வேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் நிகழ்த்துவார்.

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவி யே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக! உமது அருள் கொடைகளின் மூலம் என் உள்ளத்தை பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிப வரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சக லத்திற்கும் நன்றி கூறுகிறேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம் மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப் பேனென உறுதி கூறுகி றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனை வரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

அடியார்.

## விற்பனைக்கு

LG - பிறிஜ், 21" - Tv Panasonic, DVD - player, Code less Phone, Media com Receiver.

தொடர்பு: S.சுதன்,
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

NP.MA 3273 இலக்கம்கொண்ட மோட் டார் சைக்கிள் இலக்கத்தகடு இணுவிலுக்கும், கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.56, பூநாறி மரம் வீதி, கொக்குவில் மேற்கு என் னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மா னம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

4ஆம் வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த லெட்சுமணன் நிசாந்தன் (872761217V) என்ப வரின் தே.அ.அ., கடற்படை அ.அ. என்பன கடந்த திங் கட்கிழமை (30.09.08) வேலணை துறையூருக்கும் புங்குடுதீவுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள் ளன. [illegible] புங்குடுதீவு தபாலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

## யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனம்

விதை உருளைக்கிழங்கு தேவையான விவசா யிகள் தங்கள் கமநல நிலையத்தில் தேவையான அளவினை 10.10.2008ஆம் திகதி முன் விண்ணப் பிக்குமாறு வேண்டுகின்றோம். இதற்கான விவரங் கள் தேவைப்படின் கமநல குழுத்தலைவர்களுடன் தொடர்பு கொண்டால் அதற்கான விவரங்களை அவர்கள் மூலம் அறியலாம். இதற்கு முற்பணமாக ரூபா 5,000/= கமநல நிலையத்தில் செலுத்தலாம். என்பதனை அறியத்தருகின்றோம்.

சி.பொ.வ.மா.க.முதலியார்
தலைவர்.

நா.சிவதிருச்செந்தூரன்
செயலாளர்.

விவசாயிகள் கூடம்,
பலாலி வீதி, திருநெல்வேலி.

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா சிவசுப்பிரமணியம்

(ஆனந்தம் - பருத்தித்துறை)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சிவசுப்பிரமணியம் (ஆனந்தம்) 30.09.2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - லட் சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பெரியதம்பி - நல்லபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலா தேவி (இந்தியா) அவர்களின் அன்புக் கணவரும், ஞானராஜா (கண்ணன் - அமெரிக்கா), ஜீவராணி (ஜேர்மன்), ஜெயலட்சுமி (ஜேர்மன்), விஜயலட்சுமி (இங்கிலாந்து), நித்தியா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசூயா (அமெரிக்கா), சிவா னந்தம் (ஜேர்மன்), தர்மப்பிரியா (ஜேர்மன்), உதயகுமார் (இங்கி லாந்து) ஆகியோரின் அன்பு மாமனும், வேந்தன், மூர்த்தி, ஓவியன், கிருஷ்னா, டினுஜன், சரண்யா, அபிநயா, நிவேதன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அருள்பிரகாசம் மற்றும் சிவயோக வதி (ஆஸ்ரேலியா), ஈஸ்வரி (இலங்கை), பாரதிஇந்துநந்தினி (கனடா), சுவனேஸ்வரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோத ரரும், காலஞ்சென்ற இராமநாதன், தங்கநாதன், பாக்கியநாதன், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கண்ணன் (மகன் - அமெரிக்கா).
Cell: 1-646-483-9346
email: gsiva007@gmail.com

## திருமதி ஐயாத்துரை சரஸ்வதி



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமா கிய ஐயாத்துரை சரஸ்வதி 02.10.2008 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கம்மா, அழகம்மா, சிவலிங்கம் மற்றும் கனகம்மா, தவ மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோ ஜினி தேவி, பாலச்சந்திரன் (பிரான்ஸ்), சிவ னேசன் (சுவிஸ்), யோகராஜா (தேவன் -ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் கருணா நிதி (பிரான்ஸ்), புஸ்பவதி (சுவிஸ்), ஜெயசோதி (ஜேர்மனி) ஆகி யோரின் அன்பு மாமியாரும் றமேஸ்வரன்- சுகன்யா (கனடா), கருணா கரன் - பிரதீபா (கனடா), காஞ்சனா - நகுலேஸ்வரன் (லண்டன்), காண் டீபன் - சுபத்திரா (மல்லாகம்), சந்திரதாஸ் (கனடா), பவணீதன், பஜீனா, ஜெஸ்மினா (ஜேர்மனி), கர்ஷன், கர்மிலன், கர்மிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வைஸ்ணவி, சுவேதன், லதீசன், கெனிஷா (கனடா), சத்திகிரிசன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.10.2008) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணியளவில் இல.478/81B, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15 இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மாதம்பிட்டிய பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ.காண்டீபன்,(பேரன்)
GIRISAN STAINLESS WORKS, MALLAKAM

மில் லேன்,
மல்லாகம்.

## J.S. நல்லதம்பி

**(ஓய்வு பெற்ற அதிபர், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)**

சீன்னாலடி, அல்வாய் தெற்கு, அல்வாய் என்னும் இடத் தைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்டவரும், தம்பசிட்டி, மெதடிஸ்த கல்வி நிலைய நிர்வாகியுமான ஓய்வு பெற்ற அதிபர் ஜோன் சின்னத்தம்பி நல்லதம்பி நேற்று (03.10. 2008) வெள்ளிக் கிழமை கொழும்பில் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தெய் வானை தம்பதியினரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர் களான ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்லப்பா- செல்லாச்சி தம்பதி யினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், ராஜினி, பாமினி, நிர்மலன், விமலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜேந்திரம், பாலகுமார், கலா, அற்புத குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், எய்மி, ஏமோஸ், ஜெய ரோமி ஆகி யோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கந்தசாமி (மட்டக்களப்பு), ஓய்வு பெற்ற அதிபர் வ.சி.மயில்வாகனம், ஓய்வு பெற்ற அதிபர் த.பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு உடன் பிறப்பும் காலஞ்சென்ற நடராசா, ஓய்வு பெற்ற அதிபர் செல்வ ராசா, ஓய்வு பெற்ற அதிபர் துரைராசா, தயாமணி, காலஞ்சென்ற அதிபர் தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சா லையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ.செல்வராசா(மைத்துனர், அதிபர், சின்னத்தம்பி வித்தியாலயம்)
ம.மகேந்திரராஜா (பெறாமகன்- ஆசிரியர், யா/ஹாட்லிக்கல்லூரி)

தொடர்புகளுக்கு
0777 2060912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துச் சட்டங்களை அமுல்படுத்தல்' என்னும் தலைப்பிலான கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.
இக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்தில் காணலாம்.
வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஷான் பெர்னான்டோ, மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இரு படங்களிலும்-பிரிகேடியர் குலதுங்க, யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, யாழ்.மேலதிக நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா, யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் அமர்ந்திருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# வடக்கு மாகாணத்திலுள்ள சகல வலயங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வித் திட்டம்

## அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு

அச்சுவேலி, ஒக்.4

வடக்குமாகாணத்தில்உள்ள12 கல்வி வலயங்களிலும் அடுத்த வருடத்தில் இருந்து விசேட தேவை உடைய மாணவர்களுக்கான விசேட கல்வித் திட்டம் நடைமுறை படுத்தப்படவுள்ளது. இதற்கென 600 ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வித் திட்டத்தை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக வலய ரீதியில் தலா 50 ஆசிரி யர்கள் வீதம் மாகாண மட்டத்தில் 600 ஆசிரியர்களுக்கு விசேட தேவையுடைய மாணவர்களுக்கானகல்விச்செயற்பாட்டைமுன்னெடுப்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வித் திட்டத்தை வடக்கு மாகாண பாடசாலைகளில் முன்னெடுப்பதற்கு வசதியாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் விசேட கல்விப் பிரிவு ஒன்று செயற்படுகின்றது. அதற்குப் பொறுப்பாக திருமதி நிசாந்தி திருலிங்கநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண மட்டத்தில் விசேட கல்விக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிசாந்தி திருலிங்கநாதன் மாவட்டங்கள் தோறும் சென்று விசேட கல்விப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட 250 ஆசிரியர்களுக்கு தொடர்சியாக 10 தினங்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்கள் தோறும் பயிற்சிகள் தெரிவு செய்யப்பட்ட தலா 50 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2009 ஆம்ஆண்டு பாடசாலைகளில் அறிமுகம் செய்து முன்னெடுக்கப்படவுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 2010 ஆம் ஆண்டில் முழுமையாக பாடசாலைகள் தோறும் முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார். (202-11)

# வல்லிபுரக் கோயில் உற்சவத்தில் மக்கள் வங்கியின் கருமபீடம்

யாழ்ப்பாணம், ஒக்.4

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் பெருந்திருவிழாவை ஒட்டி உற்சவ கால கருமபீடம் ஒன்றை பருத்தித்துறை மக்கள் வங்கி ஆலய வீதியில் திறக்கவிருக்கிறது.

இன்று சனிக்கிழமை முதல் 14ஆம் திகதி வரை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தக் கருமபீடம் இயங்கும் என கிளை முகாமையாளர் தெரிவித்தார். (1)

# நூல் வெளியீட்டு விழா

கோப்பாய், ஒக்.4

ஊரெழு வேலனின் படைப்புக்களாகிய ''அறுபதில் அறுபது சக எண்பதில்'', ''மணிமொழிக்கதைகளும் முத்துக் குளியலும்''ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊரெழு கணேச வித்தியாலய மண்டபத்தில் தலைவர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரபல எழுத்தாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான சிவசரவணபவன் (சிற்பி) கலந்து கொள்வார். (1-72)

# தீவகப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு சமூக சேவைகள் அமைச்சர் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக்.4

தீவகப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கென சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

புளியங்கூடல் பலநோக்கு மண்டபம், அனலைதீவு வடக்கு பலநோக்கு மண்டபம், அனலைதீவு தெற்கு பல நோக்கு மண்டபம் ஆகியவற்றுக்கு மின்சாரம் வழங்குவதற்கு தலா 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கு தையல் இயந்திரம் கொள்வனவு செய்ய 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கியுள்ளார். (202-325)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள்

நல்லூர், ஒக்.4

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இயலளவைக் கட்டியெழுப்பும் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகள் திங்கட்கிழமை முதல் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சமுதாய அபிவிருத்தியும் சமூக வலுவூட்டலும், நிலைபேறான வாழ்வாதார அணுகுமுறைத் திட்டமுன்மொழிவு தயாரித்தல் ஆகிய தலைப்புக்களில் பயிற்சிகள் நடைபெறவுள்ளன. ஒவ்வொரு தலைப்பும் வதிவிடப் பயிற்சியாக இடம்பெறும் ஒரு குழுவுக்கு 19 பேர்கள் வீதம் பயிற்சி நெறியில் கலந்து கொள்வார்கள் என வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் வீ.குமாரசிங்கம் யாழ்.மாவட்டக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிகள் இல.34, செட்டித்தெரு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள 'லக்ஸ் ரொய்ல்ஸ்' ஹோட்டலில் நடைபெறும்.

குறிப்பிட்ட பயிற்சியின் பின்னர் தெரிவு செய்யப்படும் 25 பயிற்சியாளர்களுக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 18 ஆம் திகதி சனிக்கிழமை வரை கருத்திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி தெரிவித்தார்.(202-111)

# பொது நூலகங்களின் தகவல்கள் திரட்டப்படுகின்றன

மானிப்பாய், ஒக்.4

குடாநாட்டில் உள்ள பொது நூலகங்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

நகர சபைகள், பிரதேச சபைகளின் கீழ்வரும் பொது நூலகங்கள் தொடர்பான தகவல் திரட்டு தயாரிக்கப்படவுள்ளது.

பொது நூலகத்தின் தோற்றப்படம், பொதுநூலக அமைப்பு வரைபடம், கட்டடத்தின் வகை, தமிழ் நூல்களின் எண்ணிக்கை, ஆங்கிலநூல்களின் எண்ணிக்கை, நூலக அங்கத்தவர்களின் எண்ணிக்கை, நூலக தொண்டர்களின் எண்ணிக்கை, ஆளணி மற்றும் நிதி விவரங்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கி தயாரிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார். (202-95)

# விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை

அச்சுவேலி, ஒக்.4

இந்த வருடம் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட விரும்பும் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

அளவு, தேவையான இனம் தொடர்பான பதிவுகளை கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான விதை உருளைக்கிழங்கை இந்த வருடம் தேசாபிமான விவசாய சம்மேளனங்களின் சமாசம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்துக்கு இந்த வருடத்துக்கான விதை உருளைக்கிழங்கு இனங்கள் கொலண்ட் நாட்டில் இருந்து எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், தேவையான அளவு விதை உருளைக்கிழங்கை உரிய காலப் பகுதியில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (202-11)

# மணற்காட்டில் குடியிருப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்து

## நன்னீர் வளம் மிகச் சிறப்பாக இருப்பதே காரணம்

வடமராட்சி, ஒக்.4

வடமராட்சியில் வல்லிபுரம்- மணற்காட்டுப் பிரதேசத்தில் நன்னீர் வளம் மிகச் சிறப்பாக இருப்பதனால் அப்பிரதேசத்தில் குடியிருப்புக்குரிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

வல்லிபுரம்-மணற்காடு பகுதிகளில் நிறைந்த நன்னீர் வளம் இருப்பதாக ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு, அப்பகுதிகளிலிருந்து பருத்தித்துறை நகரத்திற்கும் அதன் சுற்றாடல் பகுதிக்கு தண்ணீர் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கான திட்டம் 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. நிலத்துக்குக் கீழ் குழாய்களும் பொருத்தப்பட்டன. ஆனால் அன்றைய அரசியல் சூழ்நிலைகள் காரணமாக அத்திட்டம் நிறைவேறாமல் போய்விட்டது.

இதன்பின்னர்தேசியநீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையூடாக பருத்தித் துறை நகரப் பகுதி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை செயறபடுத்துவது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு சாத்தியக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் பல்வேறு காரணங்களால் இத்திட்டம் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் இருந்தது.

மீண்டும் தற்போது இத்திட்டம் பார்வையிடப்பட்டு, பருத்தித்துறை நகரத்திற்கான குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் வல்லிபுரம்- மணற்காட்டுப் பிரதேசத்தில் 56 ஹெக்டேயர் பிரதேசம் நன்னீர்வளத்துடன்காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் 3 கிலோ மீற்றர் வரையுள்ள பிரதேசத்தில் குடியிருப்புக்குரிய நடவடிக்கைகள் எதுவுமேமேற்கொள்ளவேண்டாமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பருத்தித்துறை வடமராட்சி பிரதேச செயலகத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. (202-236)

# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கல்வி தொடர்பான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணகல்வித்திணைக்கள முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்வார் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் புதிய அரசியல் அணி உருவாகும் போக்கு; ஈழத்தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்குமா?

சென்னை,ஒக்.4

இலங்கைத் தமிழர்களின் அவல நிலையை உணர்த்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சென்னையில் கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்த உண்ணாவிரத நிகழ்ச்சி, புதிய அரசியல் அணி மாற்றத்துக்கு வகை செய்திருக்கிறது - என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு-

மக்களவைப் பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும்வேளையில், புதிய அரசியல் அணி மாற்றத்துக் கான நடவடிக்கைகள் தொடங்கிவிட் டன என்றே கருத வேண்டியி ருக்கிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி யில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ், தி.மு.க. ஆகியவற்றின் மீது மக்களுக்கு அதிருப்தி அதிகரித் துவருகி றது. தமிழகத்தில் இந்தக் கூட்டணியிலிருந்து பா.ம.க. முதலில் விலக்கப்பட்டது; அமெரிக்காவுடனான அணு சக்தி உடன்பாடு விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி ஆகியவை விலகின.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்த உண்ணாவிரதத் துக்கு அ.தி.மு.க., தே.மு.தி.க. ஆகியவை ஆதரவு தெரிவித்தன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராஜன், ம.தி. மு.க. பொதுச் செயலர் வைகோ ஆகியோ ரும் ஆதரவு தெரிவித்தனர்.

ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்ட ணியிலிருந்து விலகி நிற்கும் பாட்டாளி மக்கள் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் வலுவான மாற்று அணி உருவாக காத்திருக்கின்றன

இந்த மூன்று கட்சிகளின் விலக லால் தமிழகத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வலுவிழந்து நிற்கிறது. இப்போது இந்த அணியில் காங்கிரஸ், தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் மட்டுமே பெரியதாக உள்ளன.

தங்களுக்கு எதிராகப் பிற கட்சிகள் இணைந்து அணி அமைத்து விட்டால் தேர்தலில் வெற்றி பெறுவது கடினம் என்பதால்தான், தமிழகத்தில் மும்முனைப் போட்டி ஏற்படவேண்டும் என்று திட்டமிட்டு தே.மு.தி.க.வைக் கடுமையாக விமர்சனம் செய்கிறது தி.மு.க.

1998 மக்களவை பொதுத் தேர்தல் முடிவுகளை வைத்து ஆய்வு செய்தால், அ.தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய மூன்று கட்சிகள் சேர்ந்து அணி அமைத்தால் மக்களவைப் பொதுத் தேர்தலில் கணிசமான இடங்களை அந்த அணி பெற்றுவிடும் வாய்ப்பி ருப்பது தெரிகிறது

இந்த முறை பா.ஜ.கவைவிட இடதுசாரிகளுடனான கூட்டணி யைத் தான் அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா விரும்புகிறார் எனத் தெரிகிறது.

''புதிய அரசியல் அணி மாற்றத் துக்காக நாங்கள் இந்த உண்ணாவிர தத்துக்கு ஏற்பாடு செய்யவில்லை; இலங்கையில் தமிழ் இனம் திட்டமிட்டு அழிக்கப்படுவது குறித்து உண்மையிலேயே மனம் வேதனைப்பட்டுத் தான் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

''இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளை அழிக்கிறோம் என்ற போர்வையில் தமிழ் இனத்தையே அழித்துக்கொண்டிருக்கிறார். இதை சர்வ தேச சமூகம் நன்றாகப் புரிந்துகொண்டு அதற்கு எதிரா கக் கண்டனக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய அரசோ, நமது பக்கத்தில் உள்ள தீவில் நடக்கும் அப் பட் டமான மனித உரிமைகள் மீறலைக்கூட காணாததுபோல மௌனம் சாதிக்கிறது.

''இலங்கை அரசின் மனித உரி மைகள் மீறலை வெளிக்கொணரத் தான் உண்ணாவிரதப் போராட்டமே தவிர, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான உள்நோக்கம் எதுவும் இல்லை'' - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் களில் ஒருவரான சி. மகேந்திரன் கூறியுள்ளார்.


## மரண அறிவித்தல்

### அலெக்சீஸ் பிலோமினா (மணி)



யாழ்ப்பாணம், 18, புதுமை மாதாகோயில் கிழக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அலெக்சீஸ் பிலோமினா நேற்று (03.10.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அலெக்சீஸ் (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், யாழ்ப்பாணம்) இன் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான மரியாம்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் மருமகளும் ஆரோக்கியநாதன் (லிகிதர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான மேரி மக்ரலீன், பீற்றர், தாசீசியஸ் (சின்னத்தம்பி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அஞ்சலீனா, திரேசம்மா, மருசலீன், பவா, லீலா, காலஞ்சென்றவர்களான கிறகோரி, ஆரோக்கியம் ஆகியோரின் மைத்துனியும் யூட் விமலநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்), சாந்தசீலி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), அன்ரனி (பிரதேச செயலகம், நல்லூர்), ஏஞ்சலீன் றோமி ஆகியோரின் மாமியும் யூடினி, யூஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.10.2008) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18, புதுமை மாதா கோயில் கிழக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**021 222 3358** (78976)

தகவல்:
**மருமக்கள்.**

## தவறிவிட்டது

செல்வரத்தினம் குகனேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (843273947V), விசேட அட்டை, சாதி அனுமதிப் பத்திரம் என்பன 01.10.2008 அன்று சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்திற்கும் ஆறுமுக வித்தியாலத்திற்கும் இடையில் தவறிவிட் டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: செ.குகனேஸ்வரன் (குகன்),
(78967) *சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.*

## தவறிவிட்டது

பரமேஸ்வரன் கமலநாயகி என்னும் பெயருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று கடந்த 28.09.2008 அன்று வல்லிபுரக் கோயில் அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து என்.இரவிச்சந்திரன், ''கண்ணன் வாசா'' கட்டுடை, மானிப்பாய் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

83, Palaly Road, Kantharma[illegible]m, Jaffna.
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

**Apprenez le Francais a la maniere Francaise**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

Cours de Francais - பிரெஞ்சு மொழி வகுப்புகள்

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதகரத்தின் மூலமும், Alliance Francaise de Parisஇன் மூலமும் மேற்கொள்ளப்படும். பிரெஞ்சு மொழி வகுப்புகளுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், சிறுவர்கள், ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.

மேலும் A/L. பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் கற்கலாம்.

தொடர்ச்சியான 100h கற்கையின் மூலம் உள்ளக பரீட்சைக்கும், 200h கற்கையின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

(Diplome Elementaire de Langue Francaise)

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்.

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் ஏனைய விவரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாகப் பெறலாம்.
(78977)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **யோகம்மா நாகராசா**

அன்னை மடியில்
09 * 06 * 1935

ஆண்டவன் அடியில்
07 * 10 * 2005

திதி: 04.10.2008

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்*
சீரோடு மண்ணில் வாழ்ந்து - எம்
சிறப்புக்கு வித்தாய் நின்று
பாரொளிர் சுடராய் ஆகி -இன்று
பரமன் தாள் சேர்ந்த தங்கள் நினைவுகளுடன்...

ரவி வீடியோ சென்ரர்,
169, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (78975)

குடும்பத்தினர்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 * 09 * 1934 | 20 * 09 * 1993 |



**அமரர் ஈ.கே.ஆறுமுகம்**

(இ.போ.ச. முன்னாள் நடத்துநர், ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறைச் சாலை)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து பதினைந்து ஆண்டுகள் கழிந்தாலும்
பாசத்தின் நிறைகுடமாய் பரிவுடன் எம்மை வளர்த்து
கல்வியூட்டி ஆளாக்கி பாரினில் வாழ எமக்கு வழிகாட்டிய
எங்கள் அன்புத் தெய்வத்தை உயிர் உள்ளவரை என்றென்றும் மறவோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*''புதுவீடு'', வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (78955)

*தங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 * 04 * 1927 | 04 * 09 * 2008 |



கடந்த *04.09.2008* வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தம்பையா நடராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 02.10.2008 வியாழக்கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றிப் புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிரியைகள் நாளை (05.10.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்பு கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*இல.171/06, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*
(மனோன்மணி அம்மன் கோயில் அருகில்) (78964)

N.சத்தியரூபன் (*மகன் - சிறிநதியா நகைமாடம்*),
K.செல்லத்துரை (*மருமகன் - சோபனா நகைமாடம்*),
மகன், மருமகன், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**கனகசபை நவரத்தினம்**

பிறப்பு
01 * 02 * 1926

இறப்பு
04 * 09 * 2008

எம் குடும்ப விளக்காய் ஒளிவீசிய எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்தபோது எமது தாயாருக்கு முன்னின்று ஒத்தாசை புரிந்த மற்றும் மரணச்சடங்கில் கலந்துகொண்டோருக்கும் தொலைபேசி மூலமாகவும், தபால் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (04.10.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில். (78962)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் துடைப்பார் யாருமின்றித் தனித்து விடப்பட்ட வன்னி மக்கள்

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை அடுத்து வன்னியிலிருந்து ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் முற்றாக வெளியேறியுள்ளன. வன்னியில் இடம்பெயரும் மக்களுக்கு வேண்டிய மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வற்கு ஏற்பட்டுள்ள இடைவெளியை அரசாங்க அதிபர்களின் நடவடிக்கையைப் பலப்படுத்துவதன் மூலம் நிவர்த்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தின் இந்தச் செயற்றிட்டம் குறித்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகனை தொடர்புகொண்டு கேட்டபோது, தமது மாவட்டத்தில் செயற்பட்டு வந்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றிய கிளிநொச்சி மாவட்டப் பணியாளர்கள் அரசாங்க அதிபரின் கீழ் தமது பணிகளைத் தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் கீழ் பணியாற்ற விரும்பும் பணியாளர்கள் தொடர்பான விவரங்களை அவர்கள் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தனக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

இதன் அடிப்படையில் அவர்களுக்குரிய வேலைகளை தாங்கள் தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை அந்தந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கவுள்ளதாகவும் இதன்காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தோன்றியுள்ள மனிதாபிமான பணிகளுக்கான வெற்றிடங்களை ஓரளவிற்கு குறைக்கமுடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வன்னியிலிருந்து மனிதாபிமான தொண்டர் அமைப்புகள் அனைத்தும் வெளியேறிய நிலையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தனது பணிகளை அரசாங்கத்தின் அனுமதியுடன் அங்கு தொடர்கிறது. தற்போது தோன்றியுள்ள அசாதாரண சூழல் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து அவ்வமைப்பின் குரல் தரவல்ல அதிகாரியான அலெக்சாண்ட்ரியா மெற்றி ஜெவிக் கருத்து வெளியிடும்போது 'சர்வதேச தொண்டு நிறுவனமான செஞ்சிலுவைச் சங்கம் உலகளாவிய ரீதியிலான தனது கொள்கைகளின் அடிப்படைக்கிணங்க வன்னி மாவட்டத்தில் தொடர்ந்தும் தனது மனிதாபிமானப் பணிகளை முன்னெடுதது வருவதாகக் கூறினார்.



தமது பாகுபாடற்ற மத்தியஸ்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாகக் கூறிய அலெக்சாண்ட்ரியா, குறிப்பாக ஓமந்தைப் பகுதி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்குத் தேவையான ஒத்துழைப்புகளையும் மற்றும் அந்தப் பகுதி ஊடான வாகனப் போக்குவரத்து, நோயாளர்காவு வாகனப் போக்குவரத்திற்கான அனுசரணையினையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் என்றும் கூறினார். அத்துடன் வன்னிப் பகுதியில் மனிதாபிமானத் தேவைகளைக் கண்காணிப்பது குறித்து தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான தற்காலிகத் தங்குமிட வசதிகள், சமைத்த உணவு, உலர் உணவு, மருந்து வகைகள், உடுபுடைவைகள் வசதிகள், நீர் வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் மின்சார வசதியை வழங்குவதற்குமான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளரான ஏ.சி.ஆர்.ரஷீக் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாத்திரம் கடந்த ஒரு மாதகாலமாக இந்தத் தேவைகளுக்கென 25 மில்லியன் ரூபா பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள நிலைமைகளை கையாள்வதற்கான வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு 50 லட்சம்ரூபாவழங்கப்பட்டுள்ளதாகவும் ரஷீக் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா நோக்கிஇடம்பெயரும் மக்களுக்குத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை வழங்குவற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

வவுனியா நோக்கி இடம்பெயரும் மக்களின் இருப்பிட வசதிகளைக் கையாள்வதற்கு ஒரு குழுவும் முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கு ஒரு குழுவும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒரு குழுவும் தண்ணீர் வசதிக்கென ஒரு குழுவும் கல்வி நடவடிக்கைகளைக் கையாள்வதற்கென ஒரு குழுவுமாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சார்ள்ஸ் கூறினார்.

வன்னியிலிருந்து இடம்பெயரும் மக்களை வவுனியாவில் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் நீண்டகால குடியமர்த்தலுக்காக 'மெனிக்பாம்' பகுதி தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை இடம்பெயர்வுகள் நாளாந்த நிகழ்வுகளாகிப் போய்விட்ட மக்களுக்கு நிரந்தர அமைதி மட்டுமே ஆறுதலை தர முடியும் என்பதே பலரினதும் ஒருமித்த கருத்தாகும்.

(நன்றி: மீண்டும் வாழ்வோம் {Inter News})

# எரிபொருள் விலையை குறைக்கக் கோரி திறைசேரிச் செயலாளரிடம் ஐ.தே.க. மனு!

கொழும்பு,ஒக்.4

எரிபொருள்களின் விலையை உடன் குறைக்கக்கோரி ஐக்கிய தேசியக் கட்சி திறைசேரி செயலாளரிடம் நேற்றுமுன் தினம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட எம்.பிக்கள் குழுவினர் இந்த மகஜரை நேற்றுமுன்தினம்காலை கையளித்தனர்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கூறியவை வருமாறு:-

தற்போதைய வாழ்க்கைச் செலவின அதிகரிப்பால் துன்பப்படும் மக்களால் எரிபொருள் விலை அதிகரிப்பையும் தாங்க முடியாதுள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிகப்பட்டதால் அவற்றுடன் தொடர்புபட்ட அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய உலக சந்தையின் நிலைமைக்கு ஏற்ப எரிபொருள்களின் விலையை இலங்கையில் குறைப்பதன் மூலம்தான் ஏனைய பொருள்களின் விலைகளும் குறைய வாய்ப்பு ஏற்படும்.

எரிபொருள்கள் மீதான தேவையற்ற வரிகளைக் குறைத்துவிட்டால் எரிபொருள்களின் விலை தானாகக் குறையும்.

விலைக்குறைப்பு இடம்பெறும்வரை நாம் பல்வேறுவகையான போராட்டங்களை நடத்துவோம். இப்போது இது தொடர்பாக திறைசேரிச் செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளோம். இந்த மகஜரைக் கவனத்தில் கொண்டு அரசு உடன் எரிபொருள்களின், விலையைக் குறைக்க வேண்டும் - என்றார். (அ-சி)


நியூ மெடிக்கல் சென்ரர்

25ஆம் ஆண்டு நிறைவு விழாவும்

ஸ்கானிங் (Scanning) சென்ரர் திறப்பு விழாவும்

இடம்: நியூ மெடிக்கல் சென்ரர், பிரதான வீதி, நெல்லியடி.
காலம்: இன்று (04.10.2008) சனிக்கிழமை முற்பகல் 10.30 - 11.54 மணிவரையுள்ள சுபவேளை

நிகழ்வின் தலைவர்: திரு.கி.நடராசா (இளைப்பாறிய அதிபர்)

முதன்மை விருந்தினர்: உயர்திரு.க.அரியநாயகம் (மாவட்ட நீதிபதி, பருத்தித்துறை)

★ மங்கள விளக்கேற்றல் ★ ஆசியுரை ★ விருந்தினர் உரை ★ முதன்மை விருந்தினர் உரை

முதன்மை விருந்தினர் அவர்களால் "ஸ்கானிங் சென்ரர்" திறந்து வைக்கப்படும்.

இவ்விழாவில் வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறப்பு விருந்தினர்கள்:
உயர்திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்)
உயர்திரு.வே.விசுவலிங்கம் (பிரதித் திட்டப்பணிப்பாளர், மீள் எழுச்சித் திட்டம், செயலகம்,யாழ்ப்பாணம்)
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
வைத்திய கலாநிதி வி.தேவானந்தா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
உயர்திரு.வ.செல்வராசா (வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி)

கௌரவ விருந்தினர்கள்:
உயர்திரு.செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், சாவகச்சேரி)
உயர்திரு.இ.வரதீஸ்வரன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
உயர்திரு.சி.சத்தியசீலன் (பிரதேச செயலர், கரவெட்டி)
உயர்திரு.எஸ்.கே.குணசிங்கம் (முகாமையாளர், வர்த்தக வங்கி, நெல்லியடி )
உயர்திரு.இ.சிவஞானசுந்தரம்பிள்ளை (முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி )
உயர்திரு.கே.ஸ்கந்தராபு (உதவி முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, நெல்லியடி)

கருத்துரை வழங்குபவர்:
வைத்தியகலாநிதி கே.ரி.எஸ்.சாமநாதன் "ஸ்கானிங்" தொழிற்பாட்டினை ஆரம்பித்து வைப்பவர்
வைத்தியகலாநிதி எம்.சிவகுமார் (சத்திர சிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
வைத்திய கலாநிதி எஸ்.முகுந்தன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
-விழாக்குழு.

திறப்பு விழாச் சிறப்புற வாழ்த்துவோர்: ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்
இல.110, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்



தீவகம் வடக்கில் நீண்ட காலமாகக் கல்விப் பணியிலும் ஆன்மீகப் பணியிலும் சமூக சேவையிலும் ஈடுபட்டு பல கலையார்வலர்களை உருவாக்கிய அருட்சகோதரி தயாநாயகி செபமாலைக்கு தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை 'கலைஞான ஜோதி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

கரம்பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலயத்தில் முன்னாள் அதிபராகக் கடமையாற்றிய இவர் தற்போது இளவாலை கன்னியர் மடப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

* * * *



2006 ஆம் ஆண்டு அரச உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட அரச அனுபவங்களின் மீள் நிர்மாணப் போட்டியில் சிறுகதை ஆக்கத்தில் தேசிய ரீதியில் அளவெட்டியைச் சேர்ந்த உருத்திரமூர்த்தி சுகாஜனன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவரைக் கௌரவிக்கும் முகமாகத் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை 'கலையரசன்' பட்டத்தை வழங்கியுள்ளது.

இவர் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் அபிவிருத்தி உதவியாளராகப் பணியாற்றி வருகின்றார்.

* * * * *



கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் திருமதி கஜநந்தினி வரதலோஜன் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இதனைக் கௌரவிக்கும் முகமாக தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை 'கலாவித்தகி' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவர் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயத்தில் கலைமாணி பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றி வருகின்றார்.

* * * * *



யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவராக மூன்றாவது தடவையாக ச.க.தனேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் அ.துரைராஜா, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரது பதவிக் காலத்திலும் இவர் தலைவராகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# புத்தக சாலை

## சரித்திரத்தினிலே சகோதரிகள் ஐவர்



காவிய, புராண, சமய விடயங்களை இலகுபடுத்தி சரித்திரத்தினிலே ஐவர் என்னும் நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார் கவிஞர் முருகு என அழைக்கப்படும் முருகையா.

அழகியல் அம்சங்களுடன் ஒவ்வொரு கவிதைகளும் படைக்கப்பட்டுள்ளன. கதை கேட்கும், கதை படிக்கும் ஆர்வலர்களுக்கு இந்நூல் உகந்த தீனியாகவே அமைந்துள்ளது.

எளிய நடையிலும் கவிதை நயம் சொரியும் கதைக் கவிதைகளாக இவை அமைந்துள்ளன.

## காசத்தினை நிறுத்தும் உத்தி



பரவிவரும் காச நோயைக் கட்டுப்படுத்தும் ஆலோசனைகளைச் சமூக அக்கறையுடன் கடமையாய் வெளியிட்டிருக்கிறார் யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா.

'காசத்தை நிறுத்தும் உத்தி' என்னும் இந்நூல் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் நோய் வருமுன் காப்போம் என்னும் செயற்றிட்டத்துக்கு பெரும் வழிகாட்டியாக அமையும் என்றே கூறலாம்.

உலக சுகாதார நிறுவனத்தின் காசநோயை நிறுத்தும் உத்தி என்னும் கொள்கைக்கு அமைவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## சிவப்பு விமானம்



யோ.சத்யன் ஒரு டாக்டர். ஆனால் சிறந்த சிறுவர் எழுத்தாளரும் கூட. தமிழ்நாட்டில் நன்கு அறிமுகமான இவர், தமது ஆயிரம் கொக்குகள் என்ற சிறுவர் நூலுக்கான தமிழ்நாடு திருப்பூர் தமிழ்ச்சங்க குழந்தை இலக்கியப் பரிசு பெற்றுள்ளார்.

உதயன் வாசகர்களுக்கு இவர் புதியவராக இருக்கலாம். ஆனால் இலங்கையின் பிரபல எழுத்தாளர் செ.யோகநாதனின் புதல்வர் என்பது குறிபிடத்தக்கது.

இவரது சிவப்பு விமானம் என்ற சிறுவர் நூல் கிடைத்தது. பல வண்ண முகப்புடன் கூடிய இந்நூல் சிறுவர்கள் சுவைத்துப் படிக்கக்கூடிய பல கதைகளைக் கொண்டு மிளிர்கின்றது.

அமுதனின் உலகம், தங்க முடிப் பூனையார், தங்கப் புதையல், சிவப்பு விமானம் முதலிய சிறுவர் நூல்களை இவர் எழுதியுள்ளார். முழுக்கவும் கொழும்பில் பிரசுரமாகியுள்ள இந்நூல்கள் பல வண்ண அட்டைகளோடும் தெளிவான அச்சிலும் வெளியிடப்பட்டுள்ளன. கதைகளுக்குப் பொருத்தமான படங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வண்ணம் இந்த எழுத்தாளர் எதற்காக எழுதுகிறார் என்பது அவரது பின்வரும் கூற்று நன்கு புலப்படுத்துவதாய் உள்ளது.

''தமிழ்க் குழந்தைகள் நல்ல புத்தகங்களைப் படிக்கவேண்டும். அன்பும், மென்மையும், பண்பும் கொண்ட நல்ல நாயகர்களுடன் நட்புக்கொள்ளவேண்டும்..... நன்றியுள்ளம் கொண்ட பிராணிகளும் கலைகளும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அவர்களுக்குப் போதும்.''

## 'செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்'



சிறார்களின் உளத்திறனையும் கற்பனையாற்றலையும் தட்டியெழுப்பும் வகையில் சு.ஸ்ரீகுமரன், சில வருடங்களுக்கு முன்னர் 'உதயனில்' பாபு அண்ணா என்ற புனை பெயரில் எழுதிவந்த 'செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' என்ற சிறுவர்களுக்கான சிந்தனைச் சிதறல்களின் தொகுப்பு இப்போது நூலுருப் பெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை சமூக விஞ்ஞான மன்றத்தினரால் வெளியிடப்பட்ட இந்நூல், சிறுவர்களுக்கேற்ற வகையிலான ஆக்க இலக்கியங்கள் ஈழத்தில் தமிழ்மொழியில் வெளிவருவதில்லையென்ற குறையைப் போக்குவதற்கு துணை செய்துள்ளது.

பிஞ்சுகளின் மனதிலே இயல்பாகவே எழுகின்ற வினாக்களுக்கும், கண்ணில் தெரிகின்ற காட்சிகளுக்கும் 'செல்லையாத் தாத்தா' என்ற பாத்திரத்தினூடாக ஸ்ரீகுமரன் தருகின்ற விளக்கங்கள், இதுவரையும் அறியப்படாத பல உண்மை முடிச்சுக்களை- வெகு இலகுவாக- சிக்கலற்ற மொழிநடையில் அவிழ்த்துள்ளன. நிலாவரைக் கிணறு, தமிழ் எண்கள், சக்கரத்தின் தோற்றம், நுண்ணுயிரிகள் பற்றிய விளக்கங்கள் போன்ற பயனுள்ள விடயங்கள் கதை சொல்லும் முறையினூடாக விளக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் பயனுள்ள நூலாக ஸ்ரீகுமரனின் 'செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' அமைந்துள்ளது.

## சாவகச்சேரியில் சிறுவர் தின விழா

சாவகச்சேரி நகரசபையின் சிறுவர் தின விழா நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு நகரசபைக் கேட்போர்கூடத்தில் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் பணிப்பின் பெயரில் இவ்விழா நடத்தப்பட்டது.

(202-207)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் தியாகராசா அருணாசலம்

(மாஸ்ரர்)

தோற்றம்: 17.03.1923

மறைவு: 04.09.2008

வடக்கில் ஒருமகனும் கிழக்கில் ஒரு மகளும் புலம் பெயர்ந்த மேற்கில் நான்கு பிள்ளைகளும் ஆக உன் நினைவை சுமந்து தவிக்கின்றோமே ஐயா!

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 04.09.2008 இல் மங்கை மாரி அம்மனடி சேர்ந்த எமது அருமைத் தந்தையின் மறைவினையொட்டி இரங்கல் தெரிவித்தும் எம்முடன் நேரில் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எம் குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (04.10.2008) சனிக்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
அருணாசலம் சண்முகலிங்கம் (குமார்)
கேணியடி வீதி, கொக்குவில் மேற்கு.

## ஊறணிக் கிராம வீதி புனரமைப்பு

கோப்பாய், ஒக்.4

மனிதநேய கூட்டமைப்பின் அனுசரணையுடன் புத்தூர் கிழக்கு ஊறணி கிராமத்திற்கான பாரதி வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இப்பிரதேச மக்களின் நீண்ட கால போக்குவரத்துச் சிரமம் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(203-72)

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னப்பு குணசிங்கம் (காந்தன்)

பிறப்பு:16.07.1946
இறப்பு: 17.09.1985
திதி: 04.10.2008

இருபத்து மூன்று ஆண்டுகளென்ன ஒரு யுகமேயானாலும் நாங்கள் உங்களை மறவோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
பெறாமகன் (விஜயதாஸ்)

3ஆம் கட்டை,
கல்வியங்காடு.

## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி

மண் மகிழ:
02.02.1953

கண்நெகிழ
04.10.2006



### அமரர் சின்னத்தம்பி செல்வசீலன் (பாலா)

(அலோமாஸ் - உரிமையாளர், சுன்னாகம்)

''உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னில் விசுவாசம் வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்''

எட்டாத தூரம் சென்று நீர்
எண் மூன்று திங்கள் சென்றாலும்
என்றும் ஏங்குகின்றோம்
எம்முடன் நீரிருக்க.

என்றும் உங்களின்
அன்பு மனைவி: சாந்தகுமாரி,
பிள்ளைகள்: அலோமா, அஷான்,
மருமகன்: செல்வஸ்கந்தராஜா.

இராமலிங்கம் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....




உரும்பிராய் லயன்ஸ் கழகம் அண்மையில் நடத்திய கண் பரிசோதனை முகாமில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்டத் தலைவர் லயன் ஐ.ஜி சந்திரசேகரம், மூதாட்டி ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஐ.இராமச்சந்திரா, ஆளணி இயக்குநர் ஏ.சி.ரி.கிருஷ்ணராஜ் மற்றும் கழக உறுப்பினர்களும் நிற்கின்றனர். (03)



நீதி சட்ட மறுசீரமைப்பு, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் அனுசரணையுடன் இயங்கும் கரவெட்டி மத்தியஸ்த சபையின் பிரதேச உறுப்பினர்கள் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

சத்தியப் பிரமாணம் செய்து கொண்டவர்களில் (இடமிருந்து வலமாக) சி.செல்வரத்தினம், ந.பாலசுப்பிரமணியம், வே.அருட்செல்வம், யோ.பிரான்சிஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும்- ச.கோபாலசாமி, அ.ஈஸ்வரதேவன், சி.சிவராசா, செ.நல்லதம்பி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:கர்ணன்)



சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் கச்சாய் பொது நூலகத்தில் ஒரு புத்தகம் ஒரு சமுதாயம் என்னும் நிகழ்வில் சிற்பி சிவ.சரவணபவன் உரையாற்றுவதையும் பிரதேச சபைக் கீதம் இயற்றிய சங்கீதபூசணம் பொன் ஸ்ரீ வாமதேவனுக்கு ஓய்வுபெற்ற அதிபர் த.கந்தையா பொன்னாடை போர்த்துக் கௌரவிப்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: அருணன்)



கோண்டாவில் பொது அமைப்புக்களும் இணுவில் லயன்ஸ் கழகமும் இணைந்து கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடத்திய குருதிக் கொடையாளர் கௌரவிப்பின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி இ.சிவசங்கர் குருதிக் கொடையாளரைக்கௌரவிப்பதையும், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாவில் இயங்கும் கோண்டாவில் நலன்புரிச் சங்கத்தினரால் இரத்த வங்கிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பணத்துக்கான பற்றுச்சீட்டை பழைய மாணவராகிய இ.நடராசாவிடமிருந்து சிறப்பு விருந்தினர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமம் பாடசா[illegible] வழங்கும் திட்டத்தினை கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையிலும் ஆ[illegible]

ஆரம்ப நிகழ்வில் அதிபர் மு.புஸ்பராசா மாணவர்களுக்கு பால் வழங்குவதையும் அருகில் சுவாமி சித்ருபானந்தா, வகுப்பாசிரியை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:கர்ணன்)




குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி குருநகர் கலை அரங்கு முன்றிலில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் இடம்பெற்ற உடற்பயிற்சி விளையாட்டை படத்தில் காணலாம். (படம்: குருநகர் செய்தியாளர்)



பண்டத்தரிப்பு பிரான்பற்று கிராமத்தில் தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டுவதையும்-

அருகில் பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத் தலைவர் சி.மகேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (95)



தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளி விளையாட்டு விழாவிலே புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் ரீ.கதிர்காமநாதன் செல்வி விபுசா பரமேஸ்வரனுக்கு பரிசில் வழங்குகிறார். (218)




மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலைக்கு பழைய மாணவர்களும் முன்னாள் அதிபரும் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர். முன்னாள் அதிபர் க.மயில்வாகனம் உபகரணங்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: தென்னவன்)



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் பொன்னரும்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களில் சீட்டிழுப்பு மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்குப் பரிசில் வழங்கியது.

பரிசில் வழங்கும் நிகழ்வில் வங்கி உத்தியோகத்தர் கே.கே.விக்கேஸ்வரன் உரையாற்றுவதையும், மாணவன் ஒருவருக்கு பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு செயற்றிட்டம்

நல்லூர், ஒக்.4

குடாநாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக காலபோகம் 2008/2009 இல் உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் நெற்பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்திற்கு மீளக்குடியேறியவர்கள், உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்கள், வெளிமாவட்டங்களில் இருந்து திரும்பி வந்து மீளக் குடியமர்ந்தவர்கள், உள்ளூரில் இடம் பெயர்ந்து வாழ்பவர்கள் (காணியுடையவர்களாக இருத்தல் வேண்டும்), பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், பெண் தலைமைதாங்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் பயனாளிகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதற்கென உணவு விவசாய நிறுவனம் தென்பகுதியில் இருந்து 2400 புசல் நெல்லைக் கொள்வனவு செய்து எடுத்துவந்து திணைக்களத்திடம் கையளித்துள்ளது.

பி.டபிள்யூ.361, ஏ.ரி.353, பி.ரி. 303, டபிள்யூ 351 நெல்ரகங்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் பிரதி விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார். (202- 111)

## 'சலங்கையும் சந்தமும்' நடன நிகழ்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன் நடன ஆசிரியை திருமதி பிரஷாந்தி உதயபாபுவின் நெறியாள்கையில் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த நடன ஆசிரியர்களின் மாணவிகள் இணைந்து வழங்கும் 'சலங்கையும் சந்தமும்' கலை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (50)

## வடமராட்சி வடக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பொருத்தமான நிவாரணம் வழங்க நடவடிக்கை

வடமராட்சி, ஒக்.4

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும்போது பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான நிவாரணங்களை வழங்க பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக கடற்றொழிலாளர்கள் தொழிலில் எல்லா நாள்களும் ஈடுபடாத காரணத்தினால் எப்போது, எந்தெந்தப் பிரிவுகளில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு பாதுகாப்புப் படையினரால் அனுமதி வழங்கப்படுகிறதெனவும், கடற்றொழிலுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நாள்களின் விவரங்களையும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக வாராந்தம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் பரிசோதகரை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

அத்துடன் மிகவும் வறிய மீனவர்களின் விவரத்தினையும் கிராம சேவையாளர்கள் தாமதமின்றிச் சமர்ப்பிக்குமாறும் பிரதேச செயலாளரால் கேட்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக கிராம சேவையாளர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைத் தகவல்களின் மூலம் மீனவர்களுக்குரிய நிவாரணம் வழங்கும்போது பொருத்தமானவர்களுக்கு பொருத்தமான நிவாரணங்களை வழங்க முடியும் என பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (202-236)

## உருளைக்கிழங்கு விலை குறைந்தது

குருநகர், ஒக்.4

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு விலை குறைவடைந்துள்ளது. திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் இதுவரை ஒரு கிலோ 180 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த உருளைக்கிழங்கு தற்போது 120 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. (203-51)

## காரைநகரில் கலைக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.4

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் கலைக்கண்காட்சி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

கலாமன்றத் தலைவர் என்.சோதிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில், உடுவில் உதவிப் பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் பிரதம விருந்தினராகவும், காரைநகர் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சத்தியமூர்த்தி, தீவக வலய கலாசாரத் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன், காரைநகர் தபால் அதிபர் எஸ்.சண்முகரட்ணம் காரைநகர் வடக்கு கிராம அலுவலர் திருமதி ரி.வாலாம்பிகை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

# வன்னிக்குச் செல்லும் உணவு லொறிக்குள் தரிப்பிடம் காட்டும் கருவிகள் சிக்கியனவாம்

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.4

உலக உணவுத் திட்டத்தின் ஏற்பாட்டில் விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு உணவுப்பொருள்களை அனுப்பும் லொறியொன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த தரிப்பிடம் காட்டும் 22 ஜி.பி.எஸ். கருவிகளை பாதுகாப்புப் படையினர் கடந்த புதன்கிழமை மீட்டிருக்கின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

வவுனியா தாண்டிக்குளம் பிரதேசத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியொன்றினுள் இருந்த சர்க்கரை மூடையொன்றுக்குள் இருந்தே இவை மீட்கப்பட்டன எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

விடுவிக்கப்படாத வன்னிப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற லொறிகளுக்குள்ளிருந்து கடந்த செவ்வாய்க்கிழமையும் அதிசக்தி வாய்ந்த வெடிமருந்துகள் மற்றும் பற்றரிகள் என்பவற்றைப் படையினர் கைப்பற்றியிருந்தனர் எனப் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## உயர்தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் 2006, 2007 ஆம் ஆண்டில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா வைபவம் அடுத்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

சித்தியடைந்த மாணவர்களின் பெயர்ப் பட்டியலை யாழ்.அலுவலகத்தில் பார்வையிட முடியும்.

மாணவர்கள் இந்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில் தொடர்புகொண்டு பட்டமளிப்புச் சான்றிதழுக்கான கட்டணத்தையும், விண்ணப்பப் படிவத்தையும் பூர்த்திசெய்து வழங்குமாறு பதிவாளர் கோரியுள்ளார். (204)

# தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் ஆசிரியர் தின நிகழ்வுகள் கொழும்பில்

அச்சுவேலி, ஒக்.4

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மேல்மாகாணக் கிளைகளினால் நடத்தப்படும் ஆசிரியர் தினம் -2008 நிகழ்வுகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

உபதலைவர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் ''எனது ஆசிரியர் எனக்கு முக்கிய மானவர்'' என்ற தொனிப்பொருளை கொண்டு நடைபெறும் இந்த வருடத்துக்கான ஆசிரியர் தின நிகழ்வுகள் தமிழ் மொழிக் கல்வியில் உள்ள சமகாலப் பிரச்சினைகளை விளங்குதல், என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

தமிழ் ஆசிரியர்களின் ''தொழில்சார் அபிவிருத்தியும் ஆசிரியர் ஆள்சேர்ப்பும்'' என்ற விடயத்தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பியும் ''தமிழ் மொழக்கே உரித்தான கல்வி முகாமைத்துவப் பிரச்சினைகள்'' என்ற விடயத் தலைப் பில் திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரி வுரையாளர் கே.துரைராசாவும்; ''கலைத்திட்ட அபிவிருத்தியும் பாடநூல் தயாரிப்பும் விநி யோகமும்'' என்ற தலைப்பில் திறந்த பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் சி.ரி.இராசேந்திரமும், ஆசிரியர் தினச் சிறப்புரையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாக செயலாளர் எஸ்.சரவணபவானந்தனும் நிகழ்த்தவுள்ளனர். (202-11)

# எமது எதிர்காலத்துக்கு வித்திட்டவர்களான முதியவர்களை நாம் சிறப்பாக பராமரிக்க வேண்டும்

## யாழ்.ப.நோ.கூ.ச.தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.4



முதியவர்கள்தான் எமது எதிர்காலத்திற்கு அத்திவாரம் இட்டவர்கள் என்பதை கூரிய சிந்தனையுடன் ஆழமாக்கி அவர்களை நாம் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவரும் யாழ். ப.நோ.கூ.சங்கத் தலைவருமான ப.கிரிதரன்.

கைதடி முதியோர் இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் சமாசத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய காலகட்டத்தில் முதியோர்களை நாம் பராமரிப்பது காலத்தின் தேவையாகும். அதுவும் இந்த நாட்டில் எத்தனையோ முதியவர்கள் சிறந்த முறையிலான பராமரிப்பு இன்றியும் நோய்வாய்ப்பட்டும் அவதிப்படுகின்றனர்.

குறிப்பாக இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் சுமார் 191 முதியவர்களும் சிறந்த முறையில் கவனிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதையிட்டு நாம் கூட்டுறவாளர் சார்பில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அநாதரவானவர்கள், கைவிடப்பட்டவர்கள் என்ற நோக்குடன் அவர்களைப் பார்க்கக்கூடாது. இந்த முதியோர் அனைவரும் எமது உறவுகள் என்ற சிந்தனையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்ற வேண்டும்.

இப்படிப்பட்ட சிந்தனையுடன் தற்போது எமது கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டில் சிறந்த சேவைகளை செயற்படுத்தி வருகின்றது. அவற்றில் ஒன்றுதான் இந்த முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு.

இப்படிப்பட்ட திட்டங்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு அமைப்புக்களும் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது விருப்பம்.

நாம் வியாபாரத்தில் மட்டும் நின்றுவிடக்கூடாது. சமூக சேவைகளிலும் ஈடுபடுவதே காலத்தின் தேவை என்றார்.

இந்நிகழ்வில் கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம், யாழ்.ப.நோ.கூ.சங்க இயக்குனர் எஸ்.டொமினிக், பொதுமுகாமையாளர் து.மனோகரன் உட்பட கூட்டுறவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். (202-224)



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களை மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு சமாசமும், யாழ். ப.நோ.கூ.சங்கமும் இணைந்து கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சமாசத் தலைவர் ப.கிரிதரன் முதியோர்களுக்கு படுக்கை விரிப்புக்களை அன்பளிப்பாக வழங்குவதையும் அருகில் சங்க இயக்குநர் எஸ்.டொமினிக், பொதுமுகாமையாளர் து.மனோகரன் ஆகியோர் நிற்பதையும் முதல் படத்தில் காணலாம். முதியோர்கள் விளையாட்டுப் போட்டிக்கு தயாராவதை இரண்டாவது படத்திலும், போட்டியாளர்கள் பலூன் உடைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# எரிபொருள் விலை குறைப்பு சாத்தியமா?

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக என்ற வாசகத்துக்கு ஏற்ப இந்த நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட சகல பொருள்களின் விலைகளும் கேட்பாரின்றி உயர்ந்து செல்கின்றன - எகிறிப் பாய்கின்றன.

பொருள்களின் விலைகளை உயர்த்தும் பொறிமுறைகள் யாவும் அரசாங்கத்தின் கைகளிலேயே இருப்பதால், அவை குறையும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

பெரும் வர்த்தகர்கள், சிறுவியாபாரிகள் என்று எல் லாத் தரப்பினரும் விலைவாசிகள் உயர்வதற்கு ஓரளவு காரண கர்த்தாக்களாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் யாரும் கேள்வி கேட்க முடியாத இக்கட்டான நிலை. அரசாங்கம் உயர்த்துகிறது; நாம் என்ன செய்ய என்று கையை விரிக்கிறார்கள்! பாவனையாளர்களுடன் சொற்போர் நடத்தவும் செய்கிறார்கள்.

பாவனைப்பொருள்களின் விலையேற்றத்துக்குப் பிரதான - முக்கிய - காரணம் எரிபொருள்களின் விலை உயர்வே. விலை உயர்வுகளின் மூலவேரே அதுதான். எரிபொருள் விலை உயரும்போது சகலதுறை சார்ந்த உற்பத்திப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள் களின் விலை உயர்வைத் தடுக்க முடியாது என்பது யதார்த்தம். (அதனைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் அடிப்பது நாணயத்தின் இன்னொரு பக்கம்)

இது அரசாங்கத் தலைவர் தொடக்கம் ஆளும் கூட்டத்தினர் அத்தனை பேருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இலங்கையில் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போருக்கு ஒரு தடவை விலையை உயர்த்திவிட்டால் அதனைக் குறைக்க மனம் வருவதில்லை.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைச் செலவினை வானத்துக்கு உயர்த்துகிறது என்பதும் ஆட்சியாளர்களுக்குத் தெரியும். ஆனால், மக்களின் பளு குறித்து அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை; கணக்கில் எடுப்பதில்லை.

எரிபொருள்களின் விலை உலகச் சந்தையில் உயர்ந்த அடுத்த வினாடியே, ஆட்சியாளர்கள் இங்கும் உயர்த்தத் துடிப்பார்கள்; உயர்த்தி விடுவார்கள்! அரசு நட்டப்பட முடியாது; தொடர்ந்து மானியம் வழங்க முடியாது என்று நியாயமும் பிளப்பார்கள். அதேவேளை உலகச் சந்தை யில் எரிபொருள்களின் விலை குறைக்கப்படும்போது இங்கு குறைத்து விடுவோம் என்று "வாக்குறுதி" மட்டும் வழங்குவார்கள்.

கடந்த தடவை எரிபொருள்களின் விலைகளை உயர்த்திய போதும், அதே பல்லவியையே அரசு ஒப்பு வித்தது. ஆனால், உலகச் சந்தையில் எரிபொருளின் விலைகுறைக்கப்பட்டு ஒரு மாதமாகியும் இங்கு விலை குறைப்புக் குறித்து இன்னமும் வாய் திறக்க வில்லை. அது தொடர்பாகப் பேச்சு எடுக்கவும் தயங்குகிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி; எரிபொருள்களின் விலைகளைக் குறைக்குமாறு திறைசேரிச் செயலாளரிடம் நேற்று முன்தினம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று திறைசேரிக்கு நேரில் சென்று மகஜரைக் கையளித்துத் தமது கோரிக்கைக்கும் கனதி சேர்த்திருக்கிறது.

எரிபொருள்களின் மீதான தேவையற்ற வரிகளைக் குறைத்தாலே போதும், அவற்றின் விலைகள் இறங்கும். பாவனைப் பொருள்களின் விலைகளும் இறங்கும் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் அவர்கள்.

எதிர்க்கட்சியில் உள்ளதால், எரிபொருள் விலை உயர்வை வாக்கு வங்கியைப் பெருக்கும் உத்திகளில் ஒன்றாகக் கைக்கொள்ள வேண்டிய தேவையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு என்பது மற்றொரு பக்கம்.

எரிபொருள் விலை உயர்வைக் குறைப்பதற்கு அரசு மனதார - மக்கள் கஷ்டம் உணர்ந்து - மனங்கொள்ளுமா என்பது சந்தேகமே.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை உக்கிரமாக்கியுள்ள அரசுக்கு நிறையப் பணம் தேவை. வெளிநாடுகளில் இருந்து வாங்கிக் குவித்த ஆயுதங்களுக் கான செலவை ஈடு செய்ய வேண்டுமல்லவா?

ஆகையால் அது குறித்து இப்போதைக்கு அது வாய் திறக்கும் என்று எதிர்பார்க்க முடியாது!

எரிபொருள் விலை உலகச் சந்தையில் குறைந்து விட்டதால் இங்கும் எரிபொருள்களின் விலைகளைக் குறைக்க வேண்டும் என்று திறைசேரிச் செயலாளரிடம் ஐ.தே. கட்சியினர் மகஜர் கொடுத்ததைக் குறை கண்டி ருக்கிறார் அமைச்சர் ஒருவர். அடுத்த வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு கள் குறித்து திறைசேரி அதிகாரிகள் புலனைச் செலுத்திப் பணி செய்துகொண்டிருக்கும் போது, அவர்களின் வேலையை ஐக்கிய தேசியக் கட்சியினர் குழப்புவதாகக் கண்டிக்கிறார் அவர்.

இது மிகவும் நகைச்சுவையானது! மக்களின் வாழ்க்கைப் பளுவைவிட வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பது அரசாங்க அமைச்சருக்கு முதன்மையானதாகத் தெரி கிறது!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். மக்களின் வாழ்க்கைச் செலவு குறித்து - வாழ்க்கைநிலை குறித்து - அரசாங்கத்துக்கு அக்கறையே இல்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது!

எரிபொருள் விலையைக் குறைத்தால் அரச நிதியிலிருந்து சுரண்டும் வாய்ப்பு நிலைக்காது என்று அரசாங்க உறுப்பினர்கள் உள்ளூர அஞ்சுவர் என்பது இன்னொரு காரணமாகலாம்.

அது ஒரு புறமிருக்க, அடுத்த வருடத் துக்கான வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்புக்கு 18ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி விட்டதால் இப்போதே மக்கள் வயிற் றில் அடித்து அந்தப் பணத்தை சிறிது சிறிதாகச் சேர்க்க வேண்டும் என்ற நிலைப்பாடே அரச தரப்பில் மேலோங்கி இருக்கிறது என்றும் கொள்ளலாம்.

ஆற்றைக் கடக்கும் வரைதான்-தேர்தலில் வெல்லும் வரைதான் – அண்ணன் தம்பி. அதன் பின் அவர்கள் யாரோ என்ற நிலைப்பாட்டுடன் அரசாங்கம் இயங்குவதைப் பாவம் சிங்கள மக்கள் எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்? போரை முன்னிறுத்தி அவர்களை அரசு ஏய்க் காட்டுவதை உணரும் நிலையிலும் அவர்கள் இல்லை!

## 'உதயன்' ஊடக அனுசரணையுடன் மென்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'உதயன்' ஊடக அனு சர ணையுடன் அமரர் ஏ.எவ். செபமாலை முத்து ஞாபகார்த்தமாக நடத்தப்படவுள்ள மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.பல்க லைக் கழக மைதானத்தில்ஆரம்பமாகவுள் ளது. யாழ். பல்கலைக் கழக பதிவாளர் ஆட்டத்தை ஆரம்பித்து வைப்பார். இச்சுற்றுப்போட்டியில். 28 அணிகள் பங்குபற்றவுள்ளன. இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணி-யாழ்.பிரதேச செயல அணி எதிர் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக வி.கழக 'பி' அணி
* மாலை 4 மணி-சுகாதாரத் திணைக்கள அணி எதிர் யாழ். போதனா வைத்தியசாலை 'பி' அணி. (203)

## தொழில்நுட்பவியல் கற்கைக்கு மொறட்டுவ பல்கலைக்கு மேலும் 10 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.4

மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா (2008/2009 ஆண்டுக்கான) கற்கை நெறிக்கு மேலும் பத்து மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பதில் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அனுமதிக் கடிதங்கள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் யாழ்.பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவானவர்களின் விவரம் வருமாறு:-

எம்.கிருபன், ஆர்.சிவகுமார், ஜி.குகதர்சன், மி.அஜந்தன், என்.கௌதமன், மி.கஜானன், ஆர்.தர்சன், எஸ்.நிரோஜினி, வை.மதுரா, நி.மிமிலிகன். (203)

## பருத்தித்துறையில் போக்குவரத்துச் சபை அலுவலகத்தில் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஒக்.4

பருத்தித்துறையில் அமைந்துள்ள போக்குவரத்துச் சபையின் டிப்போவின் அலுவலகம் மற்றும் வேலைத்தலம் ஆகியன நேற்று முன்தினம் முற்பகல் படையினரால் சல்லடை போட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

முற்பகல் 11 மணி முதல் 2 மணி வரை நடைபெற்ற இத் தேடுதலின் போது பணியாளர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதுஎனக் கூறப்பட்டது. (அ-1)

## மின்வெட்டு அமுலில் இருந்தவேளை நாவலர் வீதியில் வீடுகளில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஒக்.4

மின்வெட்டு அமுலில் இருந்த வேளை யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள இரண்டு வீடுகளுக்குள் கூரிய ஆயுதங்களுடன் நுழைந்த கொள்ளையர்கள் வீடுகளில் இருந்தவர்களை அச்சுறுத்திப் பணம், நகை மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

மின்வெட்டு நடைமுறையில் இருந்தவேளை இரவு 7.30 மணியளவில் மதிலுக்கு மேலால் ஏறி வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் கூரிய வாளை வீட்டில் இருந்தவர்களின் கழுத்தில் வைத்து அச்சுறுத்தி அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகள், பணம், பெறுமதிமிக்க பொருள்கள் ஆகியவற்றைக் கொள்ளை யிட்டுள்ளனர். பின்னர் அடுத்துள்ள வீடொன்றிலும் அதே போன்று கொள்ளைக் கும்பல் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி நகை, பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இதில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணி புரியும் பிரபல சிரேஷ்ட வைத்தியர் ஒருவரின் வீடும் அடங்கும். வைத் தியரின் வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த தொலைபேசி இணைப்பைத் துண்டித்தனர். அதன் பின்னரே அவர்கள் கொள்ளையில் ஈடுபட்டனர். எனினும் நோயாளி ஒருவர் பற்றித் தெரிவிக்க வைத்தியசாலையில் இருந்து அந்த வைத்தியரின் மற்றொரு தொலைபேசிக்கு வந்த அழைப்பின் மூலம் குறித்த வைத்தியர் நிலைமையைத் தெளிவுபடுத்தினார். இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வைத்தியசாலை நிர்வாகத்தினர் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அது பற்றி அறிவித்தனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் வருவதற்கு முன்னரே கொள்ளையர்கள் தப்பி விட்டனர்.

மின்வெட்டு கொள்ளையர்களுக்கு அவர்களின் அடாவடித்தனத்துக்கு உதவுகிறது. (அ-50)

## வடமராட்சியில் 'ஸ்கானிங் சென்ரர்' இன்று சனிக்கிழமை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

இருதய நோயாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு வடமராட்சியில் 'ஸ்கானிங் சென்ரர்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதி, நெல்லியடியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இதுவரை காலமும் வடமராட்சியில் 'ஸ்கானிங்' வசதி இல்லாத காரணத்தால் இப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளமையால் இந்தக் குறைபாட்டுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை இருதய நோய்ச் சிகிச்சை நிபுணர் டாக்டர் பி.லக்ஷ்மன் இந்த நிலையத்திற்குக் குறிப்பிட்ட நாள்களில் சென்று சிகிச்சை வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது.

நியூ மெடிக்கல் நிலையத்தினராலேயே இந்த 'ஸ்கானிங் சென்ரர்' அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் நியூ மெடிக்கல் நிலையத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 10 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (203)

## தரம் 5 புலமைப் பரிசில் புள்ளியிடலினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் அரச, கல்வி அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக்.4

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புள்ளியிடலினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரைச் சந்தித்துத் தமது பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி.கணேசலிங்கம், டாக்டர் எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் அடங்கிய குழுவினரே மேற்படி அரச மற்றும் கல்வி அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமது பிள்ளைகள் இந்தப் புள்ளியிடலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் யாழ்.நகரப் பகுதி மாணவர்கள் மட்டுமல்ல யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர்கள் எடுத்து விளக்கினார்கள். எனவே இந்தப் புள்ளியிடலை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும், இதன் மூலம் தமது பிள்ளைகளுக்கு நிவாரணத்தைப் பெற்றுத்தர வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக உரிய மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறும் அவர்கள் துணைவேந்தர், அரச அதிபர், கல்விப் பணிப்பாளர் ஆகியோரைக் கேட்டுக் கொண்டனர்.

இது குறித்து உரிய மட்டத்துக்குத் தாம் தெரியப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அதிகாரிகள் தம்மிடம் உறுதியளித்ததாகப் பெற்றோர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (50)

## அடுத்த வருடம் பாதுகாப்புக்கு 18 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு

### பட்ஜெட்டுக்கான ஏற்பாடுகள் மும்முரம்

கொழும்பு, ஒக்.4

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இலங்கையின் பாதுகாப்புச் செலவுக்கு 17 ஆயிரத்து 710 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவிருக்கிறது.

இது தொடர்பாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முப்படையினருக்காகவும் அரசு 2009ஆம் ஆண்டில் 177.1 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யவுள்ளது.

நிதியமைச்சினால் வெளியிடப் பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மூலமாக இது தெரியவந்துள்ளது.

இராணுவத்துக்காக 8 ஆயிரத்து 390 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடற்படையினரின் தேவைகளுக்காக 2 ஆயிரத்து 750 கோடி ரூபாவும் விமானப் படையினருக்கு 2 ஆயிரத்து 50 கோடி ரூபாவும் அரசு ஒதுக்கியுள்ளது.

இலங்கைப் பொலிஸாருக்கும் துணைப் படையினருக்கும் மூவாயிரத்து 516 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. 2009ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் முதலாவது வாசிப்புக்காக எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வருடம் (2008) பாதுகாப்பு அமைச்சிற்கு அரசு 16 ஆயிரத்து 644 கோடி ரூபா ஒதுக்கியிருந்தது. (சி)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 19 | 05.10.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | மு.இ.09.41வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | மு.இ.08.55 வரை |
| சுபநேரம் : | 09.02-10.32 |
| ராகுகாலம் : | 049.32-06.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

மந்திகை,ஒக்.4

சிறுவர் பாதுகாப்பு நிதியம் (இலங்கை), சாந்திகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் துன்னாலை தெற்கு சிறு[illegible] வட்டம் நடத்தும் பாரம்பரிய விளையாட்டு [illegible]று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு [illegible]க் கந்தன் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

சாந்திகம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகவும், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கே.மனோகரன், கிராம அலுவலர் கே.பரஞ்சோதி, ஆலய பரிபாலன சபைத் தலைவர் கே.செல்லத்துரை, துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர் க.செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (202-236)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.4

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'இசையே வாழி' கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கலைத்தூது கலையத்தில் இடம்பெறவுள்ளது. (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.4

ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தாவடி, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நவராத்திரி விழா இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில், நீர்வேலி செல்வக் கதிர்காமர் கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு. தியாகராஜக் குருக்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்.போதனா வைத்தியசாலை காது, மூக்கு, தொண்டைச் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பா.திருமாறன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் ஸ்ரீ.தி.மயூரகிரி சர்மா விசேட ஆன்மீக உரையை நிகழ்த்துவார். (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.4

வடமராட்சி லயன்ஸ் கழகமும், பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு லயன் எஸ்.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.4

யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ்.வலய முன்பள்ளிகளின் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.4

அரியாலை அபிவிருத்திச் சங்கம் நடத்தும் முதியோர் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சங்க சிரேஷ்ட உப தலைவர் த. சபாரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில், நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி மீனா செந்தில்நந்தனன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் வே.க.சண்முகராசா கௌரவ விருந்தினராகவும், கிராம உத்தியோகத்தர் தி.தர்மச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி பயிலும்

**சேகரன் ஸ்ரெலின்ராஜ்**

புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகள் பெற்று பாடசாலையில் முதன்மை மாணவனாகச் சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டுவதோடு, மேலும் கல்வியில் சிறப்புற்று மிளிர வாழ்த்துகிறோம்.

உதவி அரச அதிபர் பணிமனை வீதி, சுன்னாகம். (சி/554871) **டேரியஸ்** (சித்தப்பா).

## நக்கா வீதி புனித திரேசாள் ஆலயத் திருவிழா



இன்று (04.10.2008) சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் அதனைத் தொடர்ந்து மறுநாள் 05.10.2008 ஞாயிறு காலை 7.00 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி குருமுதல்வர் அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியைத் தொடர்ந்து சுரூப ஆசீர்வாதமும் இடம்பெறும்.

(78936) **பங்குத்தந்தையும் பங்குமக்களும்.**

## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்துகளும் சேவை நலன் பாராட்டும்



**திரு.கந்தையா பத்மநேசன்**

**(சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்.இரண்டாம் மேற்தரக்கிளை)**

இலங்கை வங்கியில் 39 வருடங்கள் நற்பணியாற்றி தனது 60ஆவது பிறந்ததினமாகிய இன்று (04.10.2008) இல் இருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் திரு.கந்தையா பத்மநேசன் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைந்து பல்லாண்டு காலம்வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இவர் கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் யாழ்.மேற்தரக் கிளையிலும் சேவையாற்றியதுடன், தனது சேவைக்காலத்தில் ஊர்காவற்றுறை, திருநெல்வேலி மற்றும் யாழ்.இரண்டாம் மேற்தரக் கிளை ஆகிய கிளைகளில் முகாமையாளராகவும் சிறப்புறக் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**முகாமையாளரும் சக ஊழியர்களும்.**

(சி/554980) இலங்கை வங்கி,

யாழ்.ஸ்ரான்லி வீதி மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அல்லையம்பதி கிராமத்தில் 2008ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

| | |
|---|---|
| ரவிச்சந்திரன் ராகவன் | -146 |
| ஆனந்தமூர்த்தி சங்கீதா | -140 |
| ஜெயச்சந்திரன் அபிதாரணி | -134 |
| சபாநாதக் குருக்கள் சாருநிதா | -127 |
| நந்தகுமார் தர்மிதன் | -116 |

ஆகியோரைப் பாராட்டுவதோடு, மேன்மேலும் நற்சிறந்த பெறுபேறுகள் பெற்றுச் சிறப்பு நிலை அடைய எல்லாம் வல்ல அல்லையம்பதி முருகன் பாதம் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:

துன்னாலை. **நாம் சபாநாதக் குருக்கள் சாருநிதா குடும்பத்தினர்.**

(சி/554956)


## கட்டுரைப் போட்டிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4

தகவல் பரிமாற்றம் மீதான சிவில் சமூக வலையமைப்பு நடத்தும் 'மனிதாபிமானத்திற்கான தகவல்' என்னும் திறந்த கட்டுரைப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விண்ணப்பங்களை 'இல.17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (204)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவியும் சாந்தலிங்கம் -செல்வகுமாரி தம்பதியரின் புதல்வியுமாகிய செல்வி சா.தேனுஷா 2008 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியமைக்கு வாழ்த்துவதுடன், இவரது கற்றலுக்கு உதவிய பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அன்பொழி கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க பழம்வீதி சித்திவிநாயகர், ஞான வைரவர் ஆசிவேண்டிப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அமரர் J.P. ஐயா, அப்பா, அம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அண்ணன்மார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார்.

விநாயகர் பல்பொருள் வாணிபம், 9, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (78935)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் மாணவியும் உதயன் யெசூறினி தம்பதியரின் செல்வப் புதல்வியுமான **கஜீபா** அவர்கள் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 122 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் ரியூசன் ஆசிரியர் திரு.அன்பழகனுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் மென்மேலும் உயர் கல்வி பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, தம்பிமார், தங்கைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர் யாவரும் வாழ்த்துகின்றனர்.

இல.65, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (78956)

**அப்பப்பா- அப்பம்மா குடும்பம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை மாணவர்களான:



**யே.மேரிலூட்ஸ்** புள்ளிகள்-133



**ஜெ.மேரிஜேறோனா** புள்ளிகள்-132



**இ.பிரகாஸ்** புள்ளிகள்-117

ஆகியோரைப் பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன், இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க.வித்தியாலயம்.** பாடசாலைச் சமூகம். (78946)


## மரண அறிவித்தல்

**முருகேசு இராமலிங்கம்**

(குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர்)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராமலிங்கம் (30.09.2008) செவ்வாய்க்கிழமை இந்தியா, சென்னையில் இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவதேவியின் (உமா) அருமைத் தந்தையும் கிருபாகரனின் (மிருக வைத்தியர்)அன்பு மாமனும் தீனபந்து, தேசபந்து ஆகியோரின் அன்புக்குரிய பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் உள்ள அன்னாரது இல்லத்தில் 01.10.2008 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21/12, கிழக்கு எல்லை அம்மன் கோட்டூர், சென்னை 600 85, இந்தியா.

தகவல்:

**உமா கிருபாகரன்.**

T.P.: 00914424471743.

(78961)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயத்துக்கு முன்பே உடைந்தது புதிய கூட்டணி கம்யூனிஸ்டுகளின் முயற்சிக்கு அ.தி.மு.க. வேட்டு



சென்னை, ஒக்.4

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து, தமிழகம் முழுவதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த வியாழக்கிழமை நடத்திய உண்ணா விரதப் போராட்டத்தை அ.தி.மு.க. திடீரெனப் புறக்கணித்ததையடுத்து புதிய கூட் டணியை உருவாக்கும் இந்தியக் கம்யூனிஸ் கட்சியின் முயற்சி ஆரம்பத்திலேயே உடைந்து விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த விவரம் வருமாறு-

ஈழத் தமிழருக்கு ஆதரவான உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்குமாறு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா உட்பட அனைத்து அரசியல் கட் சித் தலைவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் அழைப்பு விடுத்திருந்தார்

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜெயலலிதா, உண்ணாவிரதப் போராட்டத்தில் தங்கள் கட்சியின் சார்பில் அமைப்புச் செயலாளர் முத்துசாமி பங்கேற்பார் என்று கடிதம் அனுப்பியிருந்தார்

இதனால், உண்ணாவிரதப் போராட் டத்தில் அ.தி.மு.க. பங்கேற்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், அ.தி.மு.க.விலிருந்து யாரும் உண்ணாவிரதத்தில் பங்கேற்கவில்லை.

ஆனால், அந்தக் கட்சியுடன் கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க. உண்ணாவிரதத்தில் பங்கேற்றது.

அ.தி.மு.கவின் இந்தத் திடீர் முடிவுக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. சென்னையில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தே.மு.தி.க. சார்பில் பண்ருட்டி ராமச்சந்திரனும், 2000க்கும் மேற்பட்ட தொண்டர்களும் கலந்துகொண்டு அமர்க்களப் படுத்தியதால் கோப மடைந்த அ.தி.மு.க. தனது முடிவை மாற்றிக்கொண்டது எனக் கூறப் படுகிறது.



அனைத்துக் கட்சிகளையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்த காரணத்தால், தி.மு.க. கூட்டணியிலுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் பங்கேற்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயல்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் அமைப்புகளும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றன.



புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பல்வேறு அமைப்புகளும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளன.

இந்த நிலையில், அ.தி.மு.கவும் போராட்டத்தில் பங்கேற்றால், இலங்கைப் பிரச்சினையில் அ.தி.மு.க. கொண்டுள்ள நிலைப்பாடு கேள்விக்குறியாகி விடும். அதனாலேயே, உண்ணாவிரதப் போராட் டத் தைத் தவிர்த் துள்ளனர் என்று அரசியல் நோக்கர்கள் கருது கின்றனர்

இதுபற்றி கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் உண்ணாவிரதத்தின் போது காலையில் கேட்டபோது, வியாழக்கிழமை மாலையில் அ.தி.மு.க. சார்பில் முத்துசா மியும், ம.தி.மு.க. சார்பில் வைகோவும் கலந்து கொள்வார்கள் என்றனர். எனினும் மாலையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மட்டுமே போராட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அ.தி.மு.கவிலிருந்து கடைசி வரை யாரும் வரவில்லை.

தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும், அ.தி.மு.க., தே.மு.தி.க. போன்ற கட்சிகள் பங்கேற்கவில்லை.

இதன் மூலம் புதிய கூட்டணி அமைக்கும் முயற்சி ஆரம்பத்திலேயே மூடுவிழாக் கண்டுள்ளது. (அ-ஒ)

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)




## இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலைக்கு இரங்க - கண்டிக்க மறுக்கின்றது இந்திய அரசு

### உண்ணாவிரத நிகழ்வில் வைகோ குற்றச்சாட்டு

இலங்கை அரசு மேற்கொண்டுவரும் தமிழினப் படுகொலைக்கு இந்தியா உதவுகிறது என்றும் இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பாகச் செயற்படாமல் இலங்கைக் கடற்படையினருக்கு ஆதரவாக செயல்படுகிறது என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:-

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு என்பதை எடுத்து கூறுவதற்காகத்தான் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

எத்தியோப்பியாவில் பட்டினி சாவு பற்றி கவலைப்படும் இந்தியா, இலங்கையில் தமிழர்கள் தாயும் மகளுமாக பட்டினியால் சாகின்றமையைப் பார்த்து ஏன் இரக்கப்படவில்லை? உணவு, மருந்து இல்லாமல் இலங்கைத் தமிழர்கள் சாகிறார்கள். இவர்களுக்கு மருந்து அனுப்பக் கூட இந்தியா அனுமதி மறுக்கிறது. இதன்மூலம் இனப்படுகொலைக்கு இந்தியா உதவுகிறது என்று நான் பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன்.

இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பாகச் செயற்படவில்லை. இலங்கைக் கடற்படையினருக்கு ஆதரவாக செயற்படுகிறது. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இராணுவத் தளபாடங்கள் கொடுக்கக்கூடாது என்ற நிலையை அரசியல் கட்சிகள் உருவாக்கவேண்டும்.

தனது சொந்த நாட்டில்தான் இனப்படுகொலையை செய்கிறேன் என்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ தப்பித் துக் கொள்ள முடியாது. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற கூண்டில் நிறுத்தும் காலம் ராஜபக்ஷவுக்கு வரும். இலங்கைத் தமிழர்கள் கவலையில் நாங்கள் பங்கேற்போம். உங்கள் கண்ணீரை துடைக்க எங்கள் கரங்கள் நீளும். இந்த போராட்டம் ஒரு திருப்பத்தை உருவாக்கியுள்ளது. உங்கள் போராட்டத்திற்கு என்றும் உறுதுணையாக இருப்போம் - என்றார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்



கடந்த 04.09.2008 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**வோல்டர் பாலகிருஸ்ணன் இராஜதுரை**

மண் உலகில் 04.07.1944 — விண் உலகில் 04.09.2008

*"கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போகும்"*

*(வெளிப்படுத்தல் 14:13)*

அன்னாரின் வாழ்க்கைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (04.10.2008) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கொக்குவில் பரி.திருத்துவ ஆலயத்தில் நடைபெற்று அதன் பின் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

திருமதி கிறிஸ்ரா இராஜதுரை (மனைவி),
S.சுரேஸ் (மகன்),
சகோதரர்கள், மைத்துனர்மார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 15 - 10 - 1930



இறைவனின் அடியில் 04 - 09 - 2008

**அமரர் நீக்கிலாப்பிள்ளை.திரவியம்**

(சிங்கராசா)

அன்பு முகம் - தளராத பேச்சுக்களும் -
மங்காத தெளிவுடன் மனங்குளிர எடுத்துரைக்கும் -
அறிவுரைகளும் அன்புகளை அரவணைக்கும்
அமைதியான சிந்தனையும்
பொங்கு நினைவுகளுடன் பூமியிலே நீர் வாழ்ந்தீர்
-காலனவன் கண்ணுற்று
கணக்கை முடித்துவிட்டான்
உங்கள் பிரிவால் துயருற்று
உளம் கலங்குகின்றோம்.

தகவல்:

சுளாவடி மேற்கு,
ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(78992)

## வேலை வாய்ப்பு

கணனி ரைப் செற்றிங் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் (பெண்கள்) தேவை.

பரணி தொழில் நுட்பசேவை,
166, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தவறி விட்டது

கரம்பைக் குறிச்சி, வரணியைச் சேர்ந்த அம்பிகைபாகன் முத்துலட்சுமி அம்மா என்பவரின் அ.அட்டை (488282352V) சாவகச்சேரிக்கும் தாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 572/6, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் இராசரத்தினம்

(சின்னமோனை)(சங்கானை)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசரத்தினம் 02.10.2008 வியாழக்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் மதிவதனி, கிரிதரன், சாந்தி, ரஜனி, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நாகலிங்க சுவாமி வீதி,
சங்கானை.

ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரியார்
(பெறாமகன்).

(78986)

### கணேசமூர்த்தி கண்ணாம்பாள்

அத்துளு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கோயிற் கடவை, துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி கண்ணாம்பாள் (கிளி) நேற்று (03.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- பாக்கியத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- செல்லாச்சியின் அன்பு மருமகளும் கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும் நிதாகரன், பிரதீனா, பகீரதன், லம்போதரன் (இத்தாலி), வாகீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயராணி, ஜெய்சங்கர் (*A.G.A Office*, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும் எழிலன், யதுர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பொன்மணி, கோபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.10.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கோயிற் கடவை,
துன்னாலை.

(A)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# உயர் பாதுகாப்பு வலயத்துக்கு சென்றுவர நேற்று அனுமதி மறுப்பு

## பாடசாலை மாணவர்கள், பணியாளர்கள் திரும்பினர்

வலிவடக்கு, ஒக். 04

தெல்லிப்பழை சோதனை நிலையம் ஊடாக அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்கு மக்கள் சென்று வர நேற்று அனுமதி வழங்கப் படவில்லை.

அதிஉயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் ஊரடங்கு நடைமுறையில் இருப்பதாக தெரிவித்து படையினரால் அனுமதி மறுக் கப்பட்டதாக அறியவந்தது.

அதன் காரணமாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தந்தை செல்வா பாடசாலை, பொன் பரமானந்தா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு சென்ற மாணவர்கள், ஆசிரியர்கள் திரும்பிச் சென்றனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கொல்லங்கட்டி பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் குருக்கள்மார், உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டதை அடுத்து, ஆலயப் பூஜைகளை மேற்கொள்ள அவர்கள் நண்பகலுக்குப் பின்னர் செல்ல அனுமதிக் கப்பட்டனர்.

பெற்றோலிய கூட்டுஸ்தாபனம், காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றில் பணி புரிபவர்களும் நேற்று தங்கள் கடமைக்குச் செல்லவில்லை. அந்தப் பணிகள் நேற்று ஸ்தம்பித்தன. (அ-01-86)

## மேலும் 75 உணவு லொறிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவரட்ணா இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை இலவசமாக விநியோகிக்கும் அரசின் மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எம்மை அழைத்து வன்னிக்கு 5 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதனைத் தொடர்ந்து பசில் ராஜபக்ஷவின் தலைமையில் உணவுப் பொருள்களை அனுப்பும் நடவடிக்கை இப்போது துரிதப் படுத்தப்பட்டுள்ளது.

புதன்கிழமை வவுனியாவில் இருந்து 51 லொறிகள் வன்னிக்கு அனுப்பப்பட்டன. அந்த உணவுப் பொருள்கள் அங்குள்ள களஞ்சியங்களில் இறக்கப்படுகின்றன.

அவை முற்றாக இறக்கி முடிக்கப்பட்ட பின்னர் உடனடியாக மக்களுக்கு விநியோகிக்குமாறும் வெற்று லொறிகளை வவுனியாவுக்கு அனுப்பிவைக்குமாறும் நான் சம்பந்தப்பட்டவர்களிடம் கூறியுள்ளேன்.

வெற்று லொறிகள் வந்ததும் ஓரிரு தினங்களில் 75 உணவு லொறிகள் மீண்டும் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் உணவு லொறிகளை அனுப்ப நாம் தீர்மானித்துள்ளோம். அதனடிப்படையில் டிசம்பர் மாத இறுதிக்குள் 5 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்பி முடிக்கப்படும்.

ஐ.நாவின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டமும் அரசும் இணைந்துதான் இந்தப் பணியை முன்னெடுக்கின்றன. அந்த அமைப்பைவிட அரசால்தான் கூடுதலான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகிறது.

இன்னும் இரண்டொரு வாரங்களில் உணவுப்பொருள் அல்லாத அத்தியாவசியப் பொருள்களும் அனுப்பி வைக்கப்படும் - என்றார். (அ-சி)

## வன்னித்தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் கேட்டுள்ளது.

கோடைகால விடுமுறை கழிந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை மீண்டும் பிரித்தானிய நாடாளுமன்றம் கூடுவதால் அதிகளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வருகை தரும் நேரத்தில் இந்தப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது - என பிரித்தானிய தமிழர் பேரவையின் பேச்சாளர் ஐரோப்பிய தொலைக்காட்சிக்குத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் வாழும் ஒவ்வொரு தமிழனும் இதனைத் தமது தார்மீகக் கடமையாக ஏற்று, தமது ஒற்றுமையையும், விருப்பையும் பிரித்தானிய அரசியல் கட்சிகளுக்கும், அனைத்துலக சமூகத்திற்கும் அனைத்துலக ஊடகங்களுக்கும் வெளிப்படுத்த முன்வரவேண்டும் எனவும் அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் உளவளத்துணை நிறுவனம் மீதும் விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்தியுள்ளன.

குண்டுத் தாக்குதல்களினால் இக்கட்டங்கள் பலத்த சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் மறைவிடம் மீது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் விமானப்படையின் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின. கிளிநொச்சியின் மேற்கே நான்கு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கனகபுரத்திலேயே இவரது இரகசிய மறைவிடம் இருந்தது. தள மற்றும் ஆகாயமார்க்கமாக திரட்டப்பட்ட புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந் தத்தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது - என விமானப் படையின் பேச்சாளர் விங்கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்துள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

## வன்னிக் கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா விவரித்தார்.

கள முனைத்தளபதிகளையும் சந்தித்த இராணுவத் தளபதி தற்போதைய நிலைவரம் குறித்துக் கேட்டறிந்தார்.

அக்கராயன் குளத்துக்கு மேற்கே புலிகள் சில கிலோ மீற்றர் தூரத்துக்கு அமைத்திருந்த சுரங்கக் காவலரண்களை ஊடறுத்து கிளிநொச்சி எல்லை வரை முன்னேறுவதற்கு எடுத்த நடவடிக்கைக்காக கள முனைத்தளபதிகளுக்கு இராணுவத் தளபதி பாராட்டுக்களைத் தெரிவித்தார் என பாதுகாப்பு அமைச்சு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு ஏழு மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அந்தப் பகுதியில் றொட்டிக் கடை நடத்துபவரின் மகன் என்றும் 27 வயது நிரம்பியவர் என்றும் கூறப்பட்டது. (அ-1)

## வன்னிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு உணவு விநியோகம் மேற்கொள்வதை யாராவது குழப்பவதையோ அல்லது மனிதாபிமானப் பணியாளர்களுக்கான அச்சுறுத் தல் விடுப்பதையோ சகித்துக் கொள்ளப்போவதில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பை மிக முக் கியமாகக் கருதுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க வன்னி மக்களுக்கான உணவு விநியோகம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவது அவசியம் என வலியுறுத்தியுள்ள உலக உணவுத் திட்டம், வாரம் ஒருமுறை ஒரு உணவுத் தொடரணியை அங்கு அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (அ-சி)

## புலிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படவில்லை. இவ்விமானங்களின் இரு குண்டுகள் கிளிநொச்சி நகரிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் களஞ்சியச்சாலையிலும் வீழ்ந்துவெடித்தன. இடம் பெயர்ந்த மக்களுக்காக அங்கு களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் என்பன நாசமடைந்தன.அதேவேளை வன்னித் தொழி நுட்பக்கல்லூரியின் யன்னல்கள் பலத்த சேதமடைந்தன. வன்னி முன்னரங்க நிலைகளிலிருந்து கிளிநொச்சி நகரை நோக்கி இராணு வத்தினர் நேற்று முன்தினம் இரவு 7 மணிமுதல் அதி காலை 4.30 மணி வரை தொடர்ச்சியாக ஆட்டிலறி மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

இப்பீரங்கித் தாக்குதலில் பொதுமக்கள் இருவர் படு காயமடைந்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சிக்கு மேற்கேயுள்ள பரவிப்பாஞ்சான் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை மீது நேற்றுக் காலை 9.20 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது என்று விமானப்படை அறிவித்தது.

கிளிநொச்சிக்கு மேற்கே நான்கு கிலோ மீற்றர் தொலை விலுள்ள பகுதிமீது நேற்றுப் பிற்பகல் 2.55 மணியளவில் விமானப் படையினரின ஜெற் விமானங்கள் மீண்டும் தாக்குதல்களை நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ-சி)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு பணிபுரியும் ஊழியர்களின் மேசை லாச்சிகளும் கொட்டித் துருவிச் சோதனை இடப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

கல்வி அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் விவரங்களையும் படையினர் சேகரித்துச் சென்றனர்.

பருத்தித்துறை பிரதேச சபையின் அலுவலகத்திலும் நேற்று படையினரின் தேடுதல் நடைபெற்றது. (அ-01)

## மோட்டார் சைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகத்தில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் (கருணாகுழு) சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மற்றும் ஒருவர் படு காயமடைந்தார்.

கருணா குழுவைச் சேர்ந்த அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த வேளையே மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இரு துப்பாக்கிதாரிகள் அவர்களை நோக்கிப் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

படுகாயமடைந்தவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு விரையப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (அ-சி)

## தமிழகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசுமீது பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தி தமிழ் நாட்டில் இலங்கை அரசுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்தப் போராட்டங்கள் பற்றி இந்திய அரசு எமக்கு அறிவிக்கவில்லை. இவை இலங்கை - இந்திய உறவில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தா.

### இந்தியா எமக்கு உதவியுள்ளது

இந்தியாவில் புலிகள் தடை செய்யப் பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்திய அரசு ஒருபோதும் புலிகளுக்கு ஆதரவு வழங்கமாட்டாது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இந்திய அரசு குறியாயிருக்கின்றது.

எமக்கும் இந்திய அரசுக்குமிடையில் நல்லதோர் உறவு உள்ளது. பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா எமக்குப் பல உதவிகளைச் செய்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராகத்தான் நாம் யுத்தம் செய்கிறோம். தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல. ஆனால், நாம் தமிழ் மக்களை அழிக்கின்றோம் என்று தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இதில் உண்மையில்லை.

எனவே, தமிழ் நாட்டில் ஏற்படும் இவ்வாறான சிறுசிறு சலசலப்புகள் பற்றி நாம் ஒருபோதும் கவலைப்படமாட்டோம்.

இது இப்படியிருக்க இலங்கையில் சிலர் தேசத்துரோகத்தனத்துடன் செயற்படுகின்றனர். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி தேசத்துரோகத்தனமான கருத்துகளைத் தொடர்ந்து வெளியிடுகின்றது.

இலங்கை அரசு இருபத்தியேழு சர்வதேச ஒப்பந்தங்களை மீறியதனாலேயே ஏற்றுமதிச் சலுகையை மீண்டும் பெறுவதில் இலங்கைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். இது பொய்.

அத்தோடு அரசு யுத்தத்தை விற்றே பிழைப்பு நடத்துகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அப்படியென்றால் பயங்கரவாதம் நாட்டில் தோற்கடிக்கப்படுவதை அவர் எதிர்க்கின்றார். எதைச் செய்தாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே ஐ.தே.கவின் திட்டம்.

நாம் இந்த தேசத்துரோகத்தனமான கருத்துகளையெல்லாம் முற்றாகத் தோற்கடித்து பயங்கரவாதத்தையும் தோற்கடித்து முழு நாட்டிலும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவோம். - என்றார். (அ-சி)

UNIT
Jaffna | Nelliady
Now Available
UNISTA
Intel 945Gc Mother board, Intel 1.8Ghz processor, 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS
UNIPRO
Asus Intel 945Gc Mother board, Intel Dual Core 2.0Ghz 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, ATX Casing with SMPS & UPS
UNIDLX
Intel Classic Main Board, Core 2 Duo 2.2Ghz, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, 17" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
UNISPL
Intel Classic Board, Core 2 Duo 2.6Ghz Extreme, 2Gb DDR2, 250Gb Hdd, DVD-RW, 17" LCD, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS
Tables, Chairs & UPS
Printer & Scanners
Hp D1460, HP P1005 Laserjet
Canon Lide 25, HP G2410
HP All in One (3 In One)
HP All in One (4 In One)
Others
Keyboards, Mouse Optical
Speaker
Woofers Creative & MicroLab
Monitors
15", 17 Samsung / Viewsonic Semi / Flat CRT.
17" Samsung LCD Wide
19" Samsung LCD Wide
128Mb AGPVGA
256Mb PCI EXPRESS VGA
We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, 4590962,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy 2264871

SPECIAL ENGLISH
★ முழுமையான கற்கை நெறி
★ A Total Immersion Course
★ For 'A' Level, Technical & University Students Teachers and the Employed
வார இறுதி வகுப்புக்கள்.
ஆரம்பமாகி விட்டது காலை 10.00 மணி
ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம்
விவரங்கள்:-New Science Hall
கன்னாதிட்டி.

பாக்யா இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு.
விஜயதசமி அன்று
இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
நேரம்: மாலை 3.00 மணி
மிருதங்கம், ஒகன், சித்திரம், வாய்ப்பாட்டும் பண்ணிசையும்
பாக்யா காகிதாதிகள்
தொலைபேசி 060 221 8382

A/L தமிழ் 2009
Paper Class
Batch-1 Sat,Sun- 11.00-12.00 a.m
Batch-2 Sat,Sun- 1.00-2.00p.m
ஆரம்பம்:- 04.10.2008 (இன்று)
A.K. B.A (Hons)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org